# உள்ளாட்சி அரசாங்கப் பிரதிநிதிகளின் குரல்

குடியரசு தினத்தன்று ஊராட்சியில் தேசியக்கொடி ஏற்ற அனுமதி மறுக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டம், கருக்காக்குறிச்சி வடதெரு ஊராட்சியின் தாழ்த்தப்பட்ட (தலித்) இனத்தைச் சேர்ந்த பெண் தலைவர் திருமிகு. கலைமணி.





கருக்காக்குறிச்சி
வடதெரு தொடக்கப்பள்ளி மற்றும்
ஊராட்சிஅலுவலகம்



ஏற்பாடு

**தமிழக ஊராட்சி அரசாங்க பெண் தலைவர்கள் கூட்டமைப்பு**
**தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்புகளின் சம்மேளனம்**
**தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டமைப்பு**

# பஞ்சாயத்துக்களுக்கான நிதி ஆதாரத்தை மாநில அரசுகளின் பொறுப்புகளிலிருந்து விடுவித்து சுயநிதி பெறுபவைகளாக மாற்றுதல்

**பஞ்சாயத்துக்கள் பலம் பெற்றிருக்கின்றதா என்பதை சோதிக்கும் முக்கிய தேர்வுகளில் ஒன்று, தங்கள் செலவீனங்களைத் தாங்களே சமாளித்துக் கொள்வதற்காக உள்ளூர் நிதி ஆதாரங்களைத் திரட்டி தம்மைத் தாமே நிர்வகிக்கும் நிறுவனங்களாக மாறுவது. தமிழ் நாட்டிலுள்ள மூன்று பஞ்சாயத்துக்களை (கிராமங்களை) ஆய்வு செய்ததின் மூலம், பல கிராமப் பஞ்சாயத்துக்கள் தாங்களே நிதி ஆதாரங்களை உருவாக்கி தங்களைத் தாங்களே நிர்வகித்தல், சுதந்திரமாகச் செயல்படுதல் மற்றும் தம் மக்களுக்கு பதில் கூறும் பொறுப்பு போன்ற கலாச்சாரங்களை கட்டி எழுப்ப முடியும் என்றும் மாநில அரசையே எதிர்பார்த்திருக்கும் சார்புத் தன்மையிலிருந்து விடுபட முடியும் என்று இக்கட்டுரை விவாதிக்கின்றது. பஞ்சாயத்துக்களிடையே இக்கலாச்சாரத்தை வளர்த்தெடுப்பதை ஊக்குவிப்பதன் மூலமும் கிராம வளர்ச்சிக்கான நிதிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி அவைகளை (பஞ்சாயத்துக்களை) கடன் பெற்று மூலதனம் பெற்றுக்கொள்வதன் மூலம் பெரும் பகுதி சார்பை குறைத்து நல்ல பல விளைவுகளைக் கொண்டு வர முடியும் என்று முடிக்கின்றது.**

**முன்னுரை:**

அரசியல் அமைப்பு சட்டத்திருத்தம் 73வது பிரிவுச் சட்டம் 1992 கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அரசியல் அமைப்பு எனும் அந்தஸ்த்தை வழங்கியது. அதுவரை அது மாநில அரசுகளின் நிர்வாக அமைப்பின் அங்கமாகவே செயல்பட்டு வந்தது. இந்த 73வது சட்டத்திருத்தத்தின் முக்கிய நோக்கமே பஞ்சாயத்து அமைப்புகள் உள்ளூர் அரசாங்க நிறுவனமாக தன்னிச்சையாக ஆட்சி செய்ய வேண்டும் என்பதும், பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதிக்கான திட்டங்களைத் திட்டமிடுவது மற்றும் செயல்படுத்துவது என்பதும்தான். அரசியலமைப்புச் சட்டத்தின் 11வது பட்டியல் (பிரிவு 243G) 29 வகையான பொறுப்புகளை பஞ்சாயத்துக்களின் ஆட்சியமைப்புக்கு உட்படுத்தி மாநில அரசுகளை, அவற்றை நடத்துவதற்கான அதிகாரம் மற்றும் பொறுப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறது. 2001ம் ஆண்டு புள்ளி விவரக் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,30,000 கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்தியாவில் உள்ளதாகவும் இந்தியாவின் மொத்த ஜனத்தொகையான 1028 மில்லியனின் 72 சதவீதம் ஊரக ஜனத்தொகை உள்ளதாகவும் இருக்கிறது. இந்த கணக்கீட்டைப் பார்க்கும்போது ஊரக பஞ்சாயத்துக்கள் பற்றிய 73வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறதென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்த 73வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தை எல்லா மாநில அரசுகளும் பின்பற்றத் துவங்க பஞ்சாயத்து சட்டத்தை கொண்டு வந்தனர். அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசும் பஞ்சாயத்து அரசாங்கச் சட்டம் ஒன்றை சட்டசபையில் 1994ல் கொண்டு வந்தது. அவ்வாறே பஞ்சாயத்து அரசாங்க நிறுவனங்கள் நடைமுறைக்கு வந்தன. இந்தச் சட்டத்தின்படி உள்ளூர் அரசியலமைப்புகளுக்கு நிதி பெறும் பொறுப்புகளும் மாநில அரசிடம் இருந்து மாறியது. இவ்வாறாக உள்ளூர் சுய ஆட்சிக்கு அடித்தளம் இடப்பட்டது. இந்த மாற்றம் கிராமப் பொதுப் பணிகளில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றத்துக்கு வழி கோரியது என்றாலும், எல்லா கிராம குடிமைகளுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய இன்னும் அதிகம் செய்ய வேண்டியுள்ளது. பஞ்சாயத்துக்களுக்கான நிதி ஆதாரத்தை பெருக்குவதென்பது அடிப்படையான ஒரு விஷயமாகும். அப்படிச் செய்தால்தான் பொருளாதார மாற்றத்தைக் கொண்டுவர கிராமப் பஞ்சாயத்துக்களால் முடியும். இந்தக் கட்டுரை மூன்று பஞ்சாயத்துக்களில் அதாவது பல்லவபுரம், பாண்டியாபுரம் மற்றும் சோழபுரம் பஞ்சாயத்துக்களில் இந்த சுயநிதி மேலாண்மை மற்றும் நிர்வாக செயல்பாடுகளை அலசி ஆராய முற்படுகின்றது. இந்த ஆய்வு தமிழ் மாநிலத்தில் பஞ்சாயத்து அமைப்புகளில் நிதி ஆதாரம் மற்றும் நிர்வாக செயல்பாடுகள் பற்றி அறிய உதவியாய் இருக்கும்.

இந்த ஆய்வில் தமிழ்நாடு பஞ்சாயத்து அரசாங்கச் சட்டம் 1994 பற்றிய ஒரு சிறு விவாதத்திற்குப் பின் குறிப்பிடப்பட்ட மூன்று பஞ்சாயத்து அரசாங்க அமைப்புகளின் அறிவியல் ரீதியான மக்கள் தொகை இயல் மற்றும் நிதியியல் குறித்து

விவாதிக்கப்படும். அதன்பின் இம்மூன்று பஞ்சாயத்துகளின் சுயநிதி மற்றும் நிதிகுறித்து மாநில அரசு கொடுத்த பொறுப்புகள் நிர்வாகம் போன்றவை விவாதிக்கப்படும். அதன்பின் அந்நிதிகளை எங்ஙனம் இப்பஞ்சாயத்துகளில் செலவிடப்படுகின்றது என்பதையும் அரசியலமைப்புச் சட்டம் சொல்லிய வண்ணம் நடைபெறுகிறதா எனக் காண்போம். அதைத் தொடர்ந்து வரும் பகுதியில் நிதி ஆதாரப் பெருக்கத்திற்கான வாய்ப்பு மற்றும் பிற நாடுகளில் செய்யப்படும் விதம் பற்றி விவாதிப்போம். இறுதியாக நம் கள ஆய்வில் கண்ட ஆதாரங்களின் அடிப்படையில் நிதி வசூல் மற்றும் நிர்வாகத்திறனை எங்ஙனம் மேம்படுத்தலாம் என ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**2001ம் ஆண்டு புள்ளி விவரக் கணக்கெடுப்பின்படி ஏறத்தாழ 2,30,000 கிராமப் பஞ்சாயத்துக்கள் இந்தியாவில் உள்ளதாகவும் இந்தியாவின் மொத்த ஜனத்தொகையான 1028 மில்லியனின் 72 சதவீதம் ஊரக ஜனத்தொகை உள்ளதாகவும் இருக்கிறது.**

## தமிழ்நாடு மாநில பஞ்சாயத்து அரசாங்கச் சட்டத்தை புரிந்து கொள்ளுதல்:

தமிழ்நாடு பஞ்சாயத்துச் சட்டம் 1994, பஞ்சாயத்து அரசு நிர்வாகம் பற்றி சொல்கிறது பிற நிர்வாகச் செயல்பாடுகள் பற்றி விரிவாகச் சொல்வதோடு சில சட்டச் செயல்பாடுகள் தேர்வு நடத்தும் முறை, பஞ்சாயத்து நிர்வாக அமைப்பு, சமூகப் பங்கெடுப்பு மற்றும் வருவாய் பற்றி விவாதிக்கிறது. பஞ்சாயத்துச் சட்டம் கீழ்கண்ட சட்டப்பூர்வ பொறுப்புகளை தெளிவாகச் சொல்கிறது.

1. கிராமத்திலுள்ள சாலைகள் மற்றும் பாலங்களை கட்டுவது மற்றும் பராமரிப்பது
2. பொது இடங்களில் மற்றும் சாலைகளில் விளக்குகள் அமைப்பது
3. கழிவுநீர் கால்வாய்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்
4. குப்பைகளை சேகரித்தல் மற்றும் அகற்றித் தெருக்களை சுத்தம் செய்தல்
5. பொதுக் கழிப்பிடங்களை உருவாக்கிப் பராமரித்தல்
6. குடிநீர் வேலைகளை செய்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் சுடுகாடு, இடுகாடுகளைக் பராமரித்தல் போன்றனவாகும். இவைகள் அல்லாமல் பஞ்சாயத்துகளில் சந்தை, விளையாட்டு அரங்குகள் மற்றும் கண்காட்சிகளை நடத்துதல் போன்றவற்றை நடத்துவதற்கான அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

**சொந்த நிதி**: சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடமைகளை பஞ்சாயத்து அமைப்புகள் நிறைவேற்றுவதற்காக கிராமங்களில் வரிகள் மற்றும் கட்டணங்கள் வசூலிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வரிகள் என்பது வீட்டுவரி தண்ணீர் வரி (உபயோகத்தின் அளவைப் பொறுத்து), தொழில் வரி (செய்யும் தொழிலை பொறுத்து), வணிக வரி, விளம்பரவரி போன்றவை அடங்கியதாகும். கிராமப் பஞ்சாயத்துகள் பலவித கட்டணங்களை வசூல் செய்ய அதிகாரம் உண்டு. இவைகளில் பஞ்சாயத்துக்களில் நிர்ணயம் செய்யப்பட்ட இடங்களில் வணிகம் மற்றும் பிற தொழில்கள் செய்வதற்கான கட்டணங்கள், ஒத்த மற்றும் வாடகை வசூலித்தல் மரங்களை மற்றும் குளங்களை ஏலம் விடுதல் போன்றவைகளும் அடங்கும். இந்தப் பணங்களை வசூலிப்பதைக் கொண்டு கிராமக் கட்டமைப்புகளை பராமரித்தல் மற்றும் பொது மக்களுக்கான சேவைகளை வழங்கலாம்.

## வழங்கப்பட்ட மற்றும் பொறுப்புகளை கொடுத்தலின் மூலம் கிடைக்கும் கிராம வருவாய்

மேற்சொன்னவைகள் அல்லாமல் பொறுப்புகளை பெறுதல் மற்றும் ஏற்கெனவே வழங்கப்பட்ட நிதி ஆதாரங்களையும் பயன்படுத்திக் கொள்ள பஞ்சாயத்து அரசாங்கச் சட்டம் வழி கூறுகின்றது. வழங்கப்பட்ட நிதி என்பது என்னவென்றால் நேரடியாக கிராமப் பஞ்சாயத்துகளில் மாநில அரசால் வசூலிக்கப்பட்டு கிராமப் பஞ்சாயத்துகளுக்கே கொடுக்கப்பட வேண்டியவைகள். சிறப்பாக வசூல் செய்ய மற்றும் எளிய வசூல் வகைகள் என்பதால் மாநில அரசால் இது செய்யப்பட்டு வந்தது. இது கேளிக்கை வரி, ஸ்டாம்புகள் விற்பதால் வரும் வரி, உள்ளூர் வரி மற்றும் ஆறுமாதத்திற்கு ஒருமுறை வசூல் செய்யப்படும் வரிகள் என்பவைகள் அடங்கும். பொறுப்புகளை கொடுத்தது அல்லது ஒப்படைத்தலின் மூலம் பெறப்படும் வருவாய் என்பது நேரடியாக மாநில அரசே கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மாநில வருவாய் வாரியப் பரிந்துரையின்படி ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படும் மான்யமாகும். இந்த வாரியங்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படும். மூன்றாவது வருவாய் வாரியம் (2006–11) பரிந்துரைத்தபடி ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் குறைந்தது ரூ.3

லட்சமாவது மான்யமாக வழங்கப்பட வேண்டும். இதுபோல மீதமிருக்கும் பணத்தை ஜனத்தொகை விகிதாச்சாரப்படி பிரித்தளிக்கப்பட வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கொடுக்கும் மான்யம் மாதவாரியாக தவணை முறையில் வழங்கப்பட வேண்டும்.

கடன்கள்: தமிழ்நாடு பஞ்சாயத்து அரசாங்கச் சட்டம் கிராமப் பஞ்சாயத்துகளை நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று பணி செய்ய அனுமதிக்கின்றது. ஆனால், இக்கடன் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மட்டுமே அல்லது இயற்கைப் பேரழிவு போன்றவற்றுக்கு மட்டுமே என்றும் நிபந்தனை விதிக்கிறது. இவ்வாறு கட்டமைப்பு மேம்பாடு மற்றும் சட்டத்தில் கூறப்பட்ட பணிகளுக்கு மட்டுமே கடன் பெறலாம் என்று கூறப்பட்டாலும் இதுவரை தமிழ்நாடு மாநிலம் முழுவதும் (ஏன் நாடு முழுவதும் என்று கூடக் கூறலாம்) எந்த ஒரு கிராமப் பஞ்சாயத்தும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றதாகத் தெரியவில்லை.

### இந்த ஆய்விலுள்ள மூன்று பஞ்சாயத்துக்களின் மக்கள் தொகை மற்றும் வருவாய் பட்டியல் கீழ்வருமாறு:

புள்ளியல் கணக்கெடுப்பு 2001ன்படி பல்லவபுரம், பாண்டியாபுரம் மற்றும் சோழபுரம் பஞ்சாயத்துகளின் மக்கள் தொகைப் பட்டியல் இதோ:

| | பல்லவபுரம் | பாண்டியாபுரம் | சோழபுரம் |
|---|---|---|---|
| மக்கள் தொகை | 3616 | 3454 | 3844 |
| குடும்பங்கள் | 802 | 814 | 897 |
| குடும்ப உறுப்பினர்கள் | 4.5 | 4.2 | 4.3 |
| ஆண் பெண் விகிதாச்சாரம் | 972 | 1018 | 1018 |

ஆதாரம்: சென்சஸ் 2001

### சொந்த வருவாய் பற்றிய ஆய்வு:

இந்தப் பஞ்சாயத்துக்களின் சொந்த வருவாய் என்பது மூன்று விஷயங்கள் அடங்கியதாய் இருக்கிறது. அவை வீட்டுவரி, தண்ணீர் வரி மற்றும் தொழில் வரி ஆகும். இந்த வருவாய் வழிகளை ஆய்வு செய்தபோது மிகவும் சந்தோஷப்பட்டுக் கொள்ளும்படியாய் எதுவுமில்லை என்றே தோன்றுகின்றது. ஒவ்வொன்றையும் துல்லியமாக ஆராய்ந்தபோது சந்தோஷமின்மைக்காண காரணங்களும் அதை சீர் செய்து கொள்வதற்கான வழிமுறைகளும் தெரியவரும்.

**வீட்டு வரி:** ஒவ்வொரு பஞ்சாயத்து எல்லைக்குள் வீட்டுவரியானது எல்லா வீடுகளிலிருந்தும் வருடாந்திரமாக வசூல் செய்யும் வரியாகும். இந்த வீட்டு வரியை நிர்ணயிப்பது ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துமாகும். பஞ்சாயத்து அரசு சட்டத்தின்படி வீட்டுவரி என்பது வீட்டு அஸ்திவார அளவு மற்றும் வீட்டு அமைப்பை பொறுத்து வரி வசூலிக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றது. ஆனால், ஆய்வுக்குட்பட்ட மூன்று பஞ்சாயத்துக்களுமே இவைகளைப் பின்பற்றாமல் சராசரி ஆண்டு வசூலையே செய்து வருகின்றன. கீழ்கண்ட அட்டவணையில் கண்டது போல மிகக் குறைந்த வீட்டுவரியையே வசூல் செய்கின்றன.

குறைந்த சராசரி வீட்டுவரி வசூலிப்பு சில வருடங்களுக்கு ஒருமுறை அதிகப்படுத்த தயக்கம் போன்றவற்றின் காரணமாக வீட்டுவரி வசூல் தொகையில் மாற்றமே ஏதமில்லை

**தமிழ்நாடு பஞ்சாயத்து அரசாங்கச் சட்டம் கிராமப் பஞ்சாயத்துகளை நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்று பணி செய்ய அனுமதிக்கின்றது. ஆனால், இக்கடன் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மட்டுமே அல்லது இயற்கைப் பேரழிவு போன்றவற்றுக்கு மட்டுமே என்றும் நிபந்தனை விதிக்கிறது.**

**வருடாந்திர வீட்டு வரிக்கட்டண விகிதம் (ரூபாயில்)**

| வருட வீட்டுவரி | பல்லவபுரம் | பாண்டியாபுரம் | சோழபுரம் |
|---|---|---|---|
| குடிசை வீடுகள் | 44 | 44 | 30 |
| ஓட்டுவீடுகள் | 55 | 66 | 44 |
| அரசு வழங்கிய வீடுகள் | 110 | 77 | 77 |
| கான்கிரீட் வீடுகள் | 550 | 220 | 110 |

இந்த வீட்டுவரி விஷயத்தில் பெரிய வருத்தம் என்னவென்றால் இந்தப் பஞ்சாயத்துகளின் எல்லைக்குள் உள்ள எல்லா வீடுகளும் வரி விதிப்புக்கு உள்ளே வந்திருக்கின்றனவா என்று அவ்வப்போது கண்காணிப்பதில்லை. தற்போதுள்ள வரி வசூலிப்பு காலாவதியாகிப் போன கணக்கெடுப்பின் அடிப்படையில் உள்ளது. எல்லா வீடுகளிலிருந்தும் நூறு சதவீதம் வரி வசூலிக்கப்பட்டுள்ளது மூன்று பஞ்சாயத்துகளிலுமே இதற்கு முக்கியக் காரணம் வீட்டுவரி ரசீது காண்பிக்கப்பட்டால்தான் தண்ணீர் இணைப்பு மற்றும்

மின் இணைப்பு கிடைக்கும் என்பதாலும் சில அரசு சலுகைகளைப் பெற உதவும் என்பதாலும்தான். ஆனால், நுணுகி ஆய்வு செய்தபோது சிலவற்றை காணமுடிந்தது. பஞ்சாயத்து பதிவேடுகளில் உள்ள வீடுகளை கணக்கெடுத்து கூட்டிப் பார்த்தால் வசூல் செய்த பணத்தைவிட அதிகம் வருகின்றது. இந்த தவறு மூன்று பஞ்சாயத்துகளிலும் தெரிகின்றது. இதை வைத்துப் பார்க்கும்போது 100 சதவீதம் வீட்டு வரி வசூலானதாகக் கூறப்படும் தொகைக்கும் உண்மையில் வசூலிக்கப்பட வேண்டிய தொகைக்கும் வித்தியாசம் தெரிகிறது. கீழே அட்டவணை காண்க.

**தமிழ்நாடு மாநிலம் முழுவதும் (ஏன் நாடு முழுவதும் என்று கூடக்கூறலாம்) எந்த ஒரு கிராமப் பஞ்சாயத்தும் நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றதாகத் தெரியவில்லை.**

**குறைவான வீட்டுவரி (ரூபாயில்)**

| | பல்லவபுரம் | பாண்டியாபுரம் |
|---|---|---|
| வசூலிக்கப்பட்ட நிதி – | 34010 | 46310 |
| கணக்கிடப்பட்ட நிதி – | 52206 | 81158 |
| குறைவாக வசூலிக்கப்பட்ட நிதி சதவீதம் (ரூ) | 35 | 43 |

இதிலிருந்து ஒன்றை நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடிகிறது. அது என்னவென்றால் பணக்காரர்களுக்கு இந்தச் சலுகை போய்விடுகின்றது என்பதுதான். குறைவாக விதிக்கப்பட்டுள்ள வீட்டுவரிக்குக் குறைவாக வரி வசூல் செய்தால் ரசீது வழங்க பஞ்சாயத்துகளால் முடியாது. எனவே, ஏழைகளிடம் பணம் எப்படியேனும் வசூலிக்கப்பட்டுவிடுகின்றது. ஆனால் வசதியான வீடுகளில் வசிக்கும் நபர்களிடம் அவர்கள் செலுத்த வேண்டியதற்குக் குறைவாகவே வசூலிக்கப்படுகின்றது என்பதுதான். எனவே குறைவாக வசூலிக்கப்படும் வீட்டுவரிகளை உயர்த்தியதாலேயே வீட்டுவரிப் பணம் கணிசமாக உயரும் என்பதை மேற்கண்ட அட்டவணையிலிருந்து அறிந்து கொள்ளலாம். அத்தோடு வீட்டு வரி விதிப்பை மறு பரிசீலனை செய்ய வேண்டியது இப்போதைய காலகட்டத்தில் அவசியமான ஒன்றாகும். ஐந்தாண்டுக்கு ஒருமுறை வீடுகளை கணக்கெடுப்பு செய்து புதியதாய் எழுப்ப மற்றும் விரிவுபடுத்திய வீடுகளை கணக்கில் கொண்டுவர வேண்டும்.

வீட்டுவரி வசூலைப் பொறுத்தவரை கொண்டுவர வேண்டிய சீர்திருத்தம் என்னவென்றால் வரிவிதிப்பு அமைப்புதான். மூன்று பஞ்சாயத்துகளிலுமே வீட்டின் அளவை பொறுத்து வரிவசூல் விதிக்கப்படுவதில்லை. சராசரியாகத்தான் வரி விதிக்கப்படுகின்றது. அப்படி விதிக்கப்பட்ட தொகைகளும் அவ்வப்போது உயர்த்தப்படுவதில்லை. எனவே வீட்டு வரிவசூல் உயர்த்தப்படாமல் குறைவான அளவாகவே நின்றுவிடுகின்றது. இதுமாநில வருவாய் வாரியம் நிர்ணயிக்கும் குறைந்த மற்றும் உயர்த்திய வரி விகித முறையை அறிமுகம் செய்வதன் மூலம் சரி செய்ய முடியும் கிராம பஞ்சாயத்துகளை இவ்வாறு வரிவசூல் செய்ய மாநில அரசு நிர்பந்திப்பதன் மூலம் வருவாய் உயர்வுக்கு வழி வகுக்கலாம். இதன் மூலம் கிராமப் பஞ்சாயத்துகள் குறைவான வீட்டு வரி வசூலிப்பதை தடுக்க முடியும்.

ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் ஒவ்வொரு பஞ்சாயத்தின் வரவு செலவு கணக்குகள் பஞ்சாயத்து ஒன்றிய அலுவலகத்தில் தணிக்கை செய்யப்படுகின்றன. ரசீதுகள் அடிப்படையில் வீட்டுவரித் தொகை சரிபார்க்கப்படும்போது அவை நேர் செய்யப்பட்டுள்ளதாக கருதப்படும். இந்த அடிப்படையில்தான் தணிக்கையில் 100 சதவீத வரி வசூலிப்பு என்று சொல்லப்பட்டு வருகின்றது. வீட்டு கட்டிட அமைப்பை பொறுத்து வரி வசூல் நடைபெற்றால்தான் சரியான திறமையான வீட்டு வரி வசூல் என்று கருத ஏதுவாகும்.

**வருமானவரிக் கணக்காய்வுகள் மூன்று பஞ்சாயத்துகளிலும் 2006–07 முதல் 2009–10 வரை வழங்கப்பட்ட மற்றும் பொறுப்புகள் கொடுத்ததன் மூலம் பெறப்பட்ட வருமானம் சொந்த வருமானத்தைவிட அதிகமாக இருப்பது தெரிய வருகின்றது. சராசரியாக மொத்த வருமானத்தில் வழங்கப் பட்ட மற்றும் பொறுப்புகளை கொடுத்ததன் மூலம் கிடைக்கும் வரும ானம ானது மூன்றில் இரண்டு பங்காக இருக்கின்றது.**

**தண்ணீர் வரி:** கிராமப் பஞ்சாயத்துகள் தனி வீடுகளுக்கு தண்ணீர் இணைப்பு கொடுத்து அதற்கு மாத

வாடகையாக வசூல் செய்து வருகின்றன. இந்த தண்ணீர் கட்டண விகிதம் பஞ்சாயத்துகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்த நிர்ணய விகிதமும் மிகக் குறைவானதாகத்தான் தெரிந்தது. ஆய்வு செய்தபோது இவைகளுக்கு இடையில் மிகச்சிறு வித்தியாசங்களையே காணமுடிந்தது. கீழே உள்ள அட்டவணையைக் காண்க.

**மாதாந்திர தண்ணீர் வரி (ரூபாயில்)**

| தண்ணீர் இணைப்பு | மாதவாடகை |
|---|---|
| பல்லவபுரம் | 30 |
| பாண்டியாபுரம் | 50 |
| சோழபுரம் | 30 |

தண்ணீர் வரி வசூல் பற்றி ஆய்வு செய்தபோது 2007–2008, 2009–2010 மிகப் பெரும் தொய்வை காண முடிந்தது. வசூல் செய்திருக்க வேண்டிய தொகைக்கும் வசூல் செய்த தொகைக்கும் இடையில் பெரிய வித்தியாசம் தெரிந்தது. கீழே உள்ள அட்டவணை விளக்கம் தரும்.

**எதிர்பார்த்த மற்றும் சராசரி தண்ணீர் வரி வசூல் (ரூபாயில்)**

| | பல்லவபுரம் | பாண்டியாபுரம் | சோழபுரம் |
|---|---|---|---|
| சராசரி வசூல் (2007–2008) (2009–2010) | 63187 | 84877 | 57450 |
| எதிர்பார்க்கும் வசூல் | 68760 | 163800 | 84600 |
| குறைவு பட்ட தொகை சதவீதம் | 8 | 48 | 32 |

வீட்டு வரி விகிதாச்சாரத்தை போலவே தண்ணீர் வரியிலும் குறைவான விகிதாச்சாரமே பின்பற்றப்பட்டிருக்கிறது. எங்களுடைய ஆய்வில் தெரியவந்ததென்னவென்றால் தண்ணீர் இணைப்பு துண்டிக்கப்பட்டுவிடும் என்ற பயமின்மை இருப்பதாகவும் பஞ்சாயத்து எழுத்தர் வீடுவீடாகச் சென்று வரி வசூலிக்கச் செல்வதும்தான். தவறான உபயோகம் மற்றும் உரிய பணம் கட்டாதவர்களுக்கு நீர் இணைப்பு துண்டிக்கப்பட வேண்டும் என்று விதி இருந்தாலும் இதுவரை இந்த அதிகாரம் பயன்படுத்தப்படவே இல்லை. இதன் தண்ணீர் வரி தவறாமல் கட்ட வேண்டும் என்ற முனைப்பு மக்களுக்கு இருப்பதில்லை. இதற்கான சாட்சி என்னவென்றால் பல்லவபுரம் பஞ்சாயத்து (2009–10) எழுத்தர் வீடுகளுக்குச் சென்று குறிப்பிட்ட நாட்களுக்குள் வரி செலுத்தவில்லை என்றால் என்று சொல்லி மிரட்டிய பின்புதான் மொத்த தண்ணீர் வரியும் அங்கு வசூலாகி இருக்கிறது.

வரிவசூல் செய்வதில் பெரிய சிரமம் என்னவென்றால் பஞ்சாயத்து எழுத்தர் வீடுவீடாகச் சென்று வரிவசூல் செய்ய வேண்டி இருப்பதுதான். கிராமங்களில் 900 குடும்பங்கள் அல்லது அதற்கு மேலோ இருக்கும்போது இது பெரிய சவாலான பணியாக அமைந்துவிடுகின்றது. அதிலும் பல வீடுகளில் கையில் பணம் இல்லை என்பதால் பிறிதொரு நாள் வரச் சொல்லி விடுகின்றனர். இந்த நடைமுறைச் சிக்கல் காரணமாக வரி வசூல் செய்வதில் தடங்கல்கள் நேர்கின்றன. மேலும் தண்ணீர் வரி என்பது மாதாமாதம் கட்ட வேண்டியது 900 வீடுகளுக்கும் எழுத்தர் மாதாமாதம் சென்று வருவதென்பது பெரிய வேலை கட்டாத வரிப்பணங்கள் வருடாந்திர வரிப்பணமாகத்தான் வந்து சேர்கின்றன. வீடு வீடாகச் சென்று வரி வசூலிப்பது என்பது மிகவும் வசதிக் குறைவானதும் திறமைக் குறைவானதும் ஆகும். எனவே, வீடுகள் தங்கள் வரிப்பணத்தை பஞ்சாயத்து அலுவலகத்துக்கு வந்து தாங்களே கட்டிச் செல்லுமாறு செய்வதும் சிறந்த வழியாகும். இது சரியான முறையில் செயல்படுத்துவது என்பது தண்ணீருக்கு வரிப்பணம் கட்டாதவர்கள் இணைப்பை துண்டிப்பது என்பதன் மூலம்தான். நீண்டகாலம் வரிப்பணத்தை கட்டாவிடில் நீண்டகால தண்ணீர் இணைப்புத் துண்டிப்பு கொடுக்கப்பட வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் மாதாமாதம் தண்ணீர் வரி செலுத்துவது என்பது உறுதிப்படுத்தப்படும்.

**சுகாதாரம், தரமான குடிநீர், கழிவுநீர் அகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்றவை மிகக் கவலை தரும் விஷயங்களாகவே மூன்று பஞ்சாயத்துகளிலும் உள்ளன.**

இறுதியாக தண்ணீர் வரியை ஒவ்வொரு ஐந்தாண்டுக்கு ஒருமுறை உயர்த்துவதன் மூலம் தண்ணீர் வழங்கப் பராமரிப்பை நேர்த்தியாகச் செய்ய முடியும்.

**தொழில் வரி:** தொழில் வரி உள்ளூர் வணிகம், அரசு பணியாளர்கள் மற்றும் கிராமத்திலுள்ள பொதுத் துறைப் பணியாளர்களிடமிருந்து வசூல் செய்யப்படுகிறது. இந்த வரி ஒன்றுதான் மேல்நோக்கி வளர்ச்சி பெற்றிருக்கிறது மூன்று பஞ்சாயத்துகளிலுமே. வீட்டுவரி வசூலைப் போலவே இதிலும் அப்போதைக்கப்போது வரியை உயர்த்துவதன் மூலம் நல்ல வருவாய் பெற வழி இருக்கிறது. மாநில வருவாய் வாரியம் தொழில் வரிக்கான அதிகபட்சத் தொகை குறைந்தபட்ச தொகை

எவ்வளவு என்று நிர்ணயம் செய்திட்டால் பஞ்சாயத்துக்கள் அதற்கு ஏற்ப வரிவசூல் செய்யலாம். இப்படி செய்வதன் மூலம் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை வரி விகிதத்தை ஏற்றுவது என்பது மட்டுமல்லாமல் நல்ல வருவாய் பஞ்சாயத்துக்கு கிடைக்கவும் வழி கிடைக்கும்.

## வழங்கப்பட்ட மற்றும் பொறுப்புகளை கொடுத்ததன் மூலம் கிடைக்கும் வருவாய் பற்றிய ஓர் ஆய்வு:

வருமான வரிக் கணக்காய்வுகள் மூன்று பஞ்சாயத்துகளிலும் 2006–07 முதல் 2009–10 வரை வழங்கப்பட்ட மற்றும் பொறுப்புகள் கொடுத்ததன் மூலம் பெறப்பட்ட வருமானம் சொந்த வருமானத்தைவிட அதிகமாக இருப்பது தெரிய வருகின்றது. சராசரியாக மொத்த வருமானத்தில் வழங்கப்பட்ட மற்றும் பொறுப்புகளை கொடுத்ததன் மூலம் கிடைக்கும் வருமானமானது மூன்றில் இரண்டு பங்காக இருக்கின்றது. இதை கீழ்கண்ட அட்டவணை மூலம் காணலாம்.

மொத்த வருமானத்தில் வழங்கப்பட்ட மற்றும் பொறுப்புகள் மூலம் கிடைக்கும் வருமான விகிதாச்சாரம்
**(2006–2007 முதல் 2009–2010 வரை)**

| | சதவீதம் (ரூ) |
|---|---|
| பல்லவபுரம் | 71.2 |
| பாண்டியாபுரம் | 67.6 |
| சோழபுரம் | 78.9 |

மேற்கண்ட அட்டவணையில் நாம் காண்பது போல மூன்று பஞ்சாயத்துகளிலும் சொந்த வருமானம் என்பது குறைந்த வரிப்பணம் மற்றும் குறைவான கட்டண விகிதங்களால் மிகவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றது என்பதை அறிந்து கொள்ளலாம். இதன் காரணமாக வழங்கப்படும் வருமானத்தையே இந்த பஞ்சாயத்துகள் பெரிதும் சார்ந்துள்ள தன்மைக்கு தள்ளப்பட்டுவிடுகின்றது. இதன் காரணமாக பஞ்சாயத்துகள் தம் குலமக்களுக்கு மிகக் குறைந்தபட்ச பொதுக்கட்டமைப்பு மற்றும் சேவைகளையே கொடுக்க முடிகிறது. சிறப்பாகச் சேவை செய்ய பணவசதி போதாமையே இதற்குக் காரணமாகும். அவர்களுக்கு வழங்கப்படும் தொகை அவர்களுக்கு வழங்கும் சேவை அடிப்படையில் இல்லாமல் மொத்தமாக வழங்கப்பட்டுவிடுகின்றது. உள்ளூர் அரசாங்கமானது தம்மக்களுக்கு சேவை செய்யும் கடமையை பெரிதாக நினைத்துக்கொள்வதில்லை. ஏனெனில், நிதிக்காக மாநில அரசை எதிர்நோக்குவதல்லாமல் தம் சொந்த வருமானத்தை பெருக்குவதில் கவனம் செலுத்துவதில்லை. இது இம்மூன்று பஞ்சாயத்துகளிலும் வழங்கியுள்ள கட்டமைப்பு வசதிகளை ஆய்வு செய்தபோது உறுதிப்படுத்தப்பட்டது.

## கிராமப் பஞ்சாயத்துக் கட்டமைப்பு வசதிகள்:

இந்த மூன்று பஞ்சாயத்துகளிலும் அவை தம் குடிமக்களுக்கு வழங்கப்படும் கட்டமைப்பு வசதிகளின் தரத்தை ஆய்வு செய்தோம். குடிநீர் வழங்கல், சுகாதார கட்டமைப்பு, கழிவுகள் மேலாண்மை மற்றும் கழிவுநீர் அகற்றுதல் போன்ற வேலை செய்தலின் அடிப்படையில், இவைகளை வழங்குவதில் பெருத்த அளவு இடைவெளியை காண முடிந்தது. கீழ்கண்ட உதாரணங்கள் எவ்வளவு குறைகள் நிறைந்துள்ளது என்பதை காட்டும்.

தண்ணீரின் தரக்கட்டுப்பாடு பெரும்பாலான குடிநீர் இணையங்களில் இருந்து சோதனை செய்ததில் 98 சதவீதம் கோலிபோர்ம் (Coliform) மாசுபட்டிருப்பது தெரியவந்தது. இது வயிற்றுப்போக்கு மற்றும் வாயுக் கோளாறுகளை கொடுக்கும் என்பதோடு வேறு சில நோய்களுக்கும் வழி வகுக்கும்.

கழிவறைகள் (வீடு) பற்றிய புள்ளி விவரம் ஏதும் இல்லாத நிலையில் பஞ்சாயத்து அலுவலர்கள் மற்றும் கிராம மக்களோடு பேசியதில் 20 சதவீதம் முதல் 30 சதவீதம் வீடுகளிலேயே கழிவறைகள் இருக்கின்றன. கட்டப்பட்டுள்ள பொதுக் கழிப்பறைகளும் மிகவும் மோசமான நிலைகளிலுள்ளன.

திடக்கழிவு அல்லது குப்பை சேகரிப்பு சாலை ஓரங்களில் நடைபெறுவதென்பது அவ்வளவு முக்கியமாக இம்மூன்று பஞ்சாயத்துகளிலும் கருதப்படவில்லை. கடைகளில் வெளியே தள்ளப்படும் குப்பைகள் அங்காங்கே குவிந்துபோய் கிடக்கின்றது. அவ்வப்போது அகற்றி சுத்தம் செய்யப்படுவதில்லை.

சோழபுரம் தவிர்த்து பிற இரண்டு பஞ்சாயத்துகளிலும் கழிவுநீர்க் குழாய் அமைப்புகளில்லை. சோழ புரத்திலுள்ள திறந்த கழிவுநீர் குழாய், கால்வாய்கள், குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்கள் நிரம்பி சுகாதாரக் கேடுகளுக்கு அழைப்புவிடுப்பதாக அமைந்துள்ளது. இதனால் கிராம சுகாதாரமே அச்சுறுத்தலான நிலைமையில் உள்ளது.

சுகாதாரம், தரமான குடிநீர், கழிவுநீர் அகற்றல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்றவை மிகக் கவலை தரும் விஷயங்களாகவே மூன்று பஞ்சாயத்துகளிலும் உள்ளன. இந்தப் பிரச்சனைகள் இங்கு மட்டுமல்லாமல் நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களிலும் இதே கதிதான் என்று சொல்லத் தோன்றுகின்றது. மிகப்பெரிய முதலீடு இந்தப்

பிரச்சனைகளை தீர்ப்பதற்காகத் தேவைப்படும் என்பதோடு இவைகளை பராமரிப்பதற்காக ஆகும். நடைமுறை மூலதனங்களும் பெரிய அளவில்தான் இருக்கும் என்பது சொல்லாமலே விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த பஞ்சாயத்துகள் வரி விகிதத்தை உயர்த்தி மீதம் இல்லாமல் வரிவசூலிக்க உறுதிபூண்டால் கணிசமான அளவில் வருமானத்தை பெருக்கலாம் என்பதோடு நல்ல சேவை அளிக்கவும் முடிந்தால் அது பொது மக்களால் சுமையாக கருதப்பட முடியாமலிருக்கும். வழங்கப்படும் சிறப்பான சேவைக்கு ஏற்ப வரி விகித உயர்வு இருக்குமானால் பொதுக் கூட்டமைப்பு சேவையும் இருக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். இறுதியாக வரி உயர்வு என்று வரும்போது தமக்கு வழங்கப்படும் சேவைகளும் தரமானதாக இருக்க வேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்ப்பார்கள். இந்த சுழற்சி நியாயமானதும் கூட இதுமட்டுமல்லாமல் நாங்கள் பெறும் சேவைகளுக்கு நாங்கள் பெறும் சேவைகளுக்கு ஏற்ப கட்டணம் செலுத்தும் கலாச்சாரத்துக்கு மக்கள் பழக்கப்பட வேண்டியது அவசியமாகும். இதுதான் திறமையான உள்ளாட்சி அரசாங்கத்துக்கான வழிமுறையாகும். கிராமங்கள் நகரங்களாகும் நிலையில் கட்டணம் செலுத்தி சேவைபெறும் கலாச்சாரம் குடிமக்களிடம் வளர்ந்தால்தான் வளரக்கூடிய வாய்ப்புள்ள இந்தப் பகுதிகளில் வளர்ச்சிக்கான மேம்பாட்டு பணிகளில் மக்கள் பங்கேற்பாளர்களாக முடியும்.

**பஞ்சாயத்துகள் வரி விகிதத்தை உயர்த்தி மீதம் இல்லாமல் வரிவசூலிக்க உறுதிபூண்டால் கணிசமான அளவில் வருமானத்தை பெருக்கலாம். அதுமல்லாமல் நல்ல சேவை அளித்தால் பொது மக்களுக்கு பெரும் சுமையாக இல்லாமல் இருக்கும்.**

நகரங்களில் உள்ள நகர மேம்பாட்டு நிதியைப் போல் கிராமங்கள் வளர்ச்சி அல்லது மேம்பாட்டு நிதி ஒன்றும் தனியார் மற்றும் அரசு பொதுப் பணி கூட்டு ஏற்பாட்டால் நிறுவப்பட வேண்டும். மாநில அரசை மட்டுமே நிதிக்காக பஞ்சாயத்துகள் நம்பி இருக்கின்ற நிலைமை மாறவேண்டும். கடன் பெற்றால் அரசு தள்ளுபடி செய்துவிடும் என்ற நிலைமையும் மாற வேண்டும். மாநில அரசு நிதி பங்கேற்பாளராக இருக்கும் நிலை மாறும்போது மாநில, வருவாய் வாரியம் அளிக்கும் மான்யத்தொகை கடன் தள்ளுபடியை நிரப்பாமலிருக்க வேண்டும். பஞ்சாயத்துகள் தம் சொந்த வருமானத்தை பெருக்கிடும்போது தம் உள்ளூர் கட்டமைப்பை சீர் செய்திடும்போது உள்ளூர் அரசாங்கத் திறமை மேம்படுவதோடு பஞ்சாயத்துகளின் தரம் சிறப்பானதாக மாறும் வாய்ப்புகள் உண்டு.

மாநில வருமான வாரியங்கள் வரி விகிதங்களை சிபாரிசு செய்தல்: வீட்டுவரி மற்றும் தொழில் வரிகளுக்கான அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச நிர்ணயங்கள் ஏற்படுத்துவதன் மூலம் நிதிப் பற்றாக்குறையை சமாளிக்கலாம். ஒவ்வொரு பஞ்சாயத்துகளும் வரி நிர்ணயம் செய்யும்போது வாரியம் நிர்ணய எல்லைக்குள் நிர்ணயம் செய்யலாம். இப்படிச் செய்வதன் மூலம் மிகக் குறைவாக வரி நிர்ணயம் பஞ்சாயத்துகள் செய்வதை தடுக்க முடியும். ஒவ்வொரு மாநில வருமான வாரியமும் புதுப்புது சிபாரிசுகளை அறிமுகம் செய்வதன் மூலம் வரி வசூலிப்பில் அதிக பணம் கொண்டு வர முடியும். வாரியம் நிர்ணயித்த வரம்புக்குள் வரி நிர்ணயித்திடும்போது பஞ்சாயத்துக்களின் தன்னாட்சி பாதிக்கப்படாததோடு தங்களுக்குப் பொருத்தமான வரி விகிதத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரமும் கிடைக்கும்.

**முடிவுகள்:**

பல்லவபுரம், பாண்டியாபுரம் மற்றும் சோழபுரம் பஞ்சாயத்துகளை ஆய்வுக்குட்படுத்தியபோது வருமானம் மற்றும் வரி விதிப்பு அடிப்படைகள் இவற்றில் உயர்த்தப்பட்டால் இந்த மூன்று கிராமப் பஞ்சாயத்துகளுமே தங்கள் நிதிநிலைமையை உயர்த்திக் கொள்வதோடு மூன்று அமைப்புகளுமே தங்கள் கிராமக் கட்டமைப்பு மற்றும் சேவைகளை மேம்படுத்த முடியும். நிதி ஆளுமையின் தன்னிறைவை அடைய முடியும். மாநில அரசை நிதிக்காக சார்ந்துள்ள நிலைமை இல்லாமல் மாறாக மக்களுக்கு பதில் சொல்லும் நிலை வரும். இந்த அடிப்படை மாற்றங்கள் ஆட்சிமுறையில் மாற்றத்தையும் அரசியலமைப்பு சட்ட விதி 73க்கு ஏற்ப உண்மை மாற்றம் நிகழும். எனவே, உள்ளூர் வருமானத்தை பெருக்குதல், கிராம வருமான வாரியம் அமைத்தல், மாநில வருமான வாரியம் வரி நிர்ணய வரம்பு ஏற்படுத்துதல் போன்றன மூலம் உள்ளூர் அரசாங்க ஆட்சியை மேம்படுத்துவதோடு கிராம மக்களுக்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் அடிப்படைத் தேவை பூர்த்தியாகும்.

ஆதாரம்: Economic & Political Weekly
ஜனவரி 28, 2012

# தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான மீறல்கள்

**(A. கதிர் @ வின்சென்ட்ராஜ்)**
செயல் இயக்குனர்

## ஆய்வறிக்கை

- **10 மாவட்டங்களில்..... 171 பஞ்சாயத்துகளில் ஆய்வு**
- **94 சதவீத பஞ்சாயத்து தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை**
- **சாதி ரீதியான அணுகுமுறையில் 85 சதவீத பஞ்சாயத்து தலைவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்**
- **பணி ரீதியான குறுக்கீடுக்கு 82 சதவீத தலைவர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர்**
- **4 பஞ்சாயத்து தலைவர்கள் மீது தாக்குதல்**
- **7 பஞ்சாயத்து தலைவர் நாற்காலியில் உட்கார அனுமதி மறுப்பு**
- **52 சதவீத பஞ்சாயத்து தலைவர்கள் கூலி வேலையில் ஈடுபட்டுள்ளனர்**

தமிழகத்தில் கடந்த அக்டோபர் 2011 மாதத்தில் உள்ளாட்சி தேர்தல் நடைபெற்றது. தேர்தல் முடிந்து 6 மாதம் கடந்துவிட்ட நிலையில் தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது பாகுபாடுகளும் வன்கொடுமைகளும் நடந்து வருகின்றன என்கிற செய்தி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டு வருகிறது. குறிப்பாக ஈரோடு மாவட்டத்தில் பகவப்பட்டி தலித் பஞ்சாயத்து தலைவர் திருமிகு.வள்ளிதெய்வானை மீது துணைத் தலைவரும் சில சாதி இந்து வன்கொடுமை கும்பலும் பல்வேறு விதமான சித்திரவதைகளை கடைபிடித்து வந்தனர். இதேபோன்று புதுக்கோட்டை மாவட்டம், கரம்பக்குடி ஒன்றியத்திற்குட்பட்ட கருவடதெரு பஞ்சாயத்து தலைவர் திருமிகு. கலைமணி அவர்கள் கடந்த ஜனவரி 26, 2012 அன்று கொடியேற்றச் சென்றபோது சாதி இந்து வன்கொடுமை கும்பலால் தடுக்கப்பட்டுள்ளார். சாதிய ரீதியாக இழிவாகப்பேசப்பட்டு அவமானமும் படுத்தப்பட்டுள்ளார். கடந்த 2006 உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட நக்கலமுத்தன்பட்டி பஞ்சாயத்து தலைவர் திரு.ஜக்கன் (2006ல் படுகொலை செய்யப்பட்டவர்), மருதங்கிணறு பஞ்சாயத்து தலைவர் திரு.சேர்வரான் (2007ல் படுகொலை செய்யப்பட்டவர்), திருவாரூர் திரு.ஜெயக்குமார் (2007ல் படுகொலை செய்யப்பட்டவர்) உள்ளிட்ட பஞ்சாயத்து தலைவர்கள் சாதி இந்து வன்கொடுமை கும்பலால் கொலை செய்யப்பட்டனர். இதுபோன்ற அவலங்கள் குறைந்தபாடில்லை.

இந்நிலையில் 2011 தமிழக உள்ளாட்சி மன்ற தேர்தலில் தலித்துகளுக்கு 26 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டது. தமிழகத்தின் மொத்த கிராம பஞ்சாயத்து தலைவர்களின் எண்ணிக்கை 12,524. இவற்றில் 3,136 (25 சதவீதம்) தலித்துகளுக்கும், 156 (1 சதவீதம்) பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டது. இதேபோன்று கிராம பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்களுக்கான இடங்கள் தமிழகத்தில் 99,333. இவற்றில் 25,360 (26 சதவீதம்) இடங்கள் தலித்துகளுக்கும், 1039 (1 சதவீதம்) பழங்குடியினருக்கும் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட பஞ்சாயத்து தலைவருக்கான இடங்கள் தமிழகத்தில் 31 உள்ளது. இவற்றில் தலித்துகளுக்கு 7 இடங்கள் ஒதுக்கப்பட்டன. இவையெல்லாம் சமூகநீதி அடிப்படையில் வரவேற்கக்கூடிய நடவடிக்கைகளாகும். அதே நேரத்தில் அரசு எதனடிப்படையில் இத்தகைய அரசியல் அதிகாரங்களை தலித்துகளுக்கு வழங்கியிருக்கிறதோ அவற்றின் நோக்கம் நிறைவேற்றப்பட்டு வருகிறதா? என்பதையும் ஆராய்வது சிவில் சமூகத்தின் முக்கிய கடமையாகும்.

சாதிய ரீதியாகவும் தீண்டாமையின் அடிப்படையிலும் பல்வேறு கொடுமைகளால் பாதிக்கப்பட்டு வரும் தலித்துகளுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டுமென்கிற அடிப்படையில் உள்ளாட்சி, சட்டமன்றம், பாராளுமன்றம் ஆகிய தேர்தல்களில் தலித்துகள் மட்டுமே போட்டியிடுகிற தனித்தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. கிராமம், மாவட்டம், மாநிலம், தேசிய அளவில் தலித் பிரதிநிதித்துவம் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் அம்மக்களின் அரசியல் அங்கீகாரத்தை உறுதிபடுத்துவதற்காகத்தான் சமவாய்ப்பினை ஏற்படுத்தி சமஅந்தஸ்த்தினை உருவாக்க முடியும் என்கிற நோக்கத்தோடு இம்முறை கொண்டு வரப்பட்டது. ஆனாலும் சாதி இந்துக்களும் சாதிய மனோபாவத்துடன் இருக்கக்கூடிய அரசு அதிகாரிகளும் தலித் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கு எதிராக செயல்படுகின்றனர் என்கிற விமர்சனம் சமூக ஆர்வலர்களாக தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன. இந்நிலையில் தலித் பஞ்சாயத்து தலைவர்கள் சுதந்திரமாக, தன்னிச்சையாக தங்கள் பொறுப்பினை செயலாற்ற முடிகிறதா? தலித் பஞ்சாயத்து

தலைவர்களுக்கு குறுக்கீடாக இருப்பவர்கள் யார்? தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது ஏதேனும் மீறல்கள் நடைபெறுகின்றனவா? உள்ளிட்ட பல்வேறு நிலைகளை ஆராய்வதற்காக எமது எவிடன்ஸ் அமைப்பு தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகள் என்கிற ஆய்வினை கடந்த மார்ச் – ஏப்ரல் 2012 மாதங்களில் நடத்தியது.

## ஆய்வு எல்லைகளும் முறைகளும்

தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகள் என்கிற ஆய்வு மதுரை (24 பஞ்சாயத்துகள், சிவகங்கை (17 பஞ்சாயத்துகள்), திண்டுக்கல் (21 பஞ்சாயத்துகள்), தேனி (21 பஞ்சாயத்துகள்), கோயம்புத்தூர் (13 பஞ்சாயத்துகள்), ஈரோடு (8 பஞ்சாயத்துகள்), விழுப்புரம் (19 பஞ்சாயத்துகள்), கடலூர் (19 பஞ்சாயத்துகள்), நாகப்பட்டிணம் (10 பஞ்சாயத்துகள்), தஞ்சாவூர் (19 பஞ்சாயத்துகள்) ஆகிய 10 மாவட்டங்களில் உள்ள 171 பஞ்சாயத்துகளில் நடத்தப்பட்டது.

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 பஞ்சாயத்துகளின் தலித் தலைவர்கள் அனைவரும் தங்கள் மீதான பாகுபாடுகளை உண்மை என்று கூறி ஆய்வு படிவத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்துள்ளனர். இதில் 32 பஞ்சாயத்து தலைவர்கள் தங்கள் மீதான பாகுபாடுகளை வாக்குமூலமாக பதிவு செய்து கொடுத்துள்ளனர். பஞ்சாயத்து தலைவர்களின் வாக்குமூலமும் கையொப்பமிட்ட ஆய்வு படிவமும் எங்களது ஆய்வின் முக்கிய ஆதாரமாக கருதுகிறோம்.

பஞ்சாயத்து தலைவர்களின் பாலின மற்றும் சாதிய விபரம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 தலித் பஞ்சாயத்து தலைவர்களில் 87 (51 சதவீதம்) பேர் ஆண்டுகள். 84 (49 சதவீதம்) பேர் பெண்கள், இவர்களில் 92 (54 சதவீதம்) பேர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும், 41 (24 சதவீதம்) பேர் பள்ளர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும், 33 (19 சதவீதம்) பேர் அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். 171 பஞ்சாயத்து தலைவர்களில் தலித் ரிசர்வ் (பொது) தொகுதியைச் சேர்ந்தவர்கள் 90 (53 சதவீதம்). தலித் பெண் ரிசர்வ் தொகுதியைச் சேர்ந்தவர்கள் 77 (45 சதவீதம்). பொது தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித்துகள் 4 (2.3. சதவீதம்).

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 பஞ்சாயத்துகளில் 167 பஞ்சாயத்துகள் இரண்டாவது முறையாக ரிசர்வ் தொகுதியாக உள்ளன. 896 கிராமங்களை உள்ளடக்கிய 171 பஞ்சாயத்துகளின் மக்கள் தொகை 7,23,029. இவர்களில் ஆண்கள் 50 சதவீதம், பெண்கள் 50 சதவீதம். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பஞ்சாயத்துகளின் மொத்த மக்கள் தொகையில் 29 சதவீதம் தலித்துகளும், 71 தலித் அல்லாதோர்களும் உள்ளனர். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 தலித் பஞ்சாயத்து தலைவர்களில் முதன் முறையாக தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 129 (75 சதவீதம்). 25 சதவீத பஞ்சாயத்து தலைவர்கள் ஏற்கெனவே தலைவர்களாக இருந்துள்ளனர்.

## பஞ்சாயத்து தலைவர்களுக்கான பயிற்சி மற்றும் திறன்கள் விபரம்

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 பஞ்சாயத்துகளில் 160 (94 சதவீதம்) பஞ்சாயத்துகளின் தலைவர்களுக்கு இதுவரை அரசு எவ்வித பயிற்சியும் அளிக்கவில்லை. இதுமட்டுமல்லாமல் 163 (90 சதவீதம்) தலித் பஞ்சாயத்து தலைவர்களுக்கு சமூக பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக நீதி சார்ந்த தகவல்கள் எதுவும் கொடுக்கப்படவில்லை. பஞ்சாயத்து வரைடம் 2 பஞ்சாயத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பு அகற்றுதல் குறித்து பயிற்சி 2 பஞ்சாயத்திற்கும், பஞ்சாயத்திற்கு உட்பட்ட நிலங்கள் யார் கையில் உள்ளது என்பதை கண்டறிவது குறித்து 2 பஞ்சாயத்திற்கும், தீண்டாமை பாகுபாடுகள் நிலவி வந்தால் அவற்றை ஒழிப்பது குறித்து 1 பஞ்சாயத்திற்கும், பஞ்சாயத்து நிர்வாகம் குறித்து 7 பஞ்சாயத்திற்கும், கணக்கு மற்றும் தணிக்கை குறித்து 3 பஞ்சாயத்திற்கும் பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது.

பஞ்சாயத்து தலைவர்களுக்கு நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, சமூக நீதி உள்ளிட்ட திறன் வளர்ப்பு பயிற்சியினை அரசு தொடர்ந்து கொடுக்க வேண்டும். ஆனால், ஊராட்சிமன்ற தேர்தல் முடிந்து 6 மாத காலம் கடந்துவிட்ட நிலையில் 94 சதவீத பஞ்சாயத்துகளுக்கு பயிற்சி அளிக்கப்படாமல் இருப்பது ஏற்புடையதல்ல. இத்தகைய பயிற்சிதான் பஞ்சாயத்து தலைவர்களின் ஆளுமை மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்தும். இதன் முக்கியத்துவத்தை அரசு புரிந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற பயிற்சி பஞ்சாயத்து தலைவர்களுக்கு அளிக்கப்பட்டால் நிர்வாகம் மட்டுமல்ல தங்கள் மீதான பாகுபாடுகளையும் நிர்வாக நெருக்கடிகளையும் எதிர்கொண்டு சுமூகமாக பணியினை கொண்டு செல்ல ஏதுவாக இருக்கும் என்பதை எமது எவிடன்ஸ் அமைப்பு அரசிற்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

## பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணங்கள்

171 பஞ்சாயத்து தலைவர்களின் வாக்குமூலத்தில் 146 பஞ்சாயத்துகளில் தங்களுடன் வேட்பாளர்கள்

தங்களைவிட கூடுதலான படிப்பினை படித்துள்ளனர் என்று கூறியுள்ளனர். தாங்கள் பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் நிற்பதற்கு முக்கியமான காரணமாக இருந்தவர்கள் சாதி இந்துக்கள் தான் என்று 105 (61 சதவீதம்) தலைவர்கள் கூறியுள்ளனர். குடும்பத்தினரும் காரணம் என்றும் 71 தலைவர்களும், உறவினர்களும் காரணம் என்று 29 தலைவர்களும், தலித்துகளும் காரணம் என்று 55 தலைவர்களும் கூறியுள்ளனர். அரசியல் கட்சியினர் தங்களை தேர்தலில் நிற்க வற்புறுத்தியதாக 23 பஞ்சாயத்து தலைவர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர்.

எமது எவிடன்ஸ் அமைப்பு ஆய்வு செய்த 171 பஞ்சாயத்து தலைவர்களில் 61 சதவீதத்தினர் சாதி இந்துக்கள் தான் தங்களை தேர்தலில் நிற்க வலியுறுத்தியுள்ளனர் என்று கூறியுள்ளனர். அதுமட்டுமல்லாமல் 146 பஞ்சாயத்து தலைவர்கள் தங்களைவிட கூடுதலாக படித்தவர்கள் தேர்தலில் நிற்க வைக்கப்பட்டு தோற்கடிப்பட்டனர் என்கிற விபரத்தையும் கூறியுள்ளனர். இதன்மூலம் சாதி இந்துக்களுக்காக தலித் தலைவர்கள் பினாமியாக நிற்கப்பட்டதற்கான தந்திரம் அறிய முடிகிறது. தங்களைவிட கல்வித் தகுதியிலும் சமூக பணியிலும் கூடுதல் தகுதியிருந்தும் அவர்கள் எல்லாம் சாதிய கட்டுமானத்தின் சூழ்ச்சியில் வீழ்த்தப்பட்டிருப்பதும் கண்டறிய முடிகிறது. அதே நேரத்தில் 171 பஞ்சாயத்து தலைவர்களில் 32 சதவீத தலைவர்கள் தான் தலித்துகளும் தங்களை தேர்தலில் நிற்க வலியுறுத்தினர் என்று கூறியுள்ளனர். இதன் மூலம் தலித் பஞ்சாயத்து தலைவர்களுக்கு தலித்துகளின் ஆதரவு குறைவாக இருந்தது என்பது அர்த்தமல்ல. பஞ்சாயத்து தேர்தலை சாதி இந்துக்கள் தான் தீர்மானிக்கக்கூடிய சக்திகளாக இருந்து வருகின்றனர் என்பதற்கான அத்தாட்சிதான் 61 சதவீத பஞ்சாயத்துகளில் தலித்துகளை சாதி இந்துக்கள் தேர்தலில் நிற்க வற்புறுத்தியுள்ளனர்.

பஞ்சாயத்து தலைவர்களின் தொழிலும் மாத வருமானமும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 பஞ்சாயத்து தலைவர்களில் 49 (42 சதவீதம்) பேர் விவசாயக் கூலியாக உள்ளனர். கூலித் தொழிலாளியாக 10 பேரும், சுயதொழில் செய்பவர்கள் 21 பேரும் உள்ளனர். வேலை எதுவும் பார்க்காத பஞ்சாயத்து தலைவர்களின் எண்ணிக்கை 83 (48.6 சதவீதம்). ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 தலித் பஞ்சாயத்து தலைவர்களில் 134 (78 சதவீதம்) பேர் தங்களுக்கு தேர்தல் சம்பந்தமான கடன் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

பஞ்சாயத்து தலைவர்களின் மாத வருமானத்தை ஆய்வு செய்தபோது 83 பஞ்சாயத்து தலைவர்கள் தங்களது வருமானத்தை தெரிவிக்கவில்லை. 88 தலைவர்கள் தங்களது மாத வருமானத்தை தெரிவித்துள்ளனர். ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 48.5 சதவீத பஞ்சாயத்து தலைவர்களுக்கு எவ்வித வேலையும் இல்லை என்பது துயரமான சிக்கலாகும். 52 சதவீத பஞ்சாயத்து தலைவர்கள் விவசாயக் கூலியாகவும் பிற கூலி வேலையிலும் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக 40 சதவீத பஞ்சாயத்து தலைவர்களுக்கு மாத வருமானம் ரூ.2000. இதுமட்டுமல்லாமல் ரூ.2000 முதல் 5000 வரை மாதம் வருமானம் பெறக்கூடிய பஞ்சாயத்து தலைவர்களின் எண்ணிக்கை 40 (45) சதவீதம்.

பஞ்சாயத்துகளில் சாதி, சுயசார்பு பொருளாதாரம் இல்லாத நிலை, சாதி இந்துக்களிடம் கூலி வேலை பார்க்கிற அவலம் உள்ளிட்ட சமூக சீர்கேடுகள் பஞ்சாயத்து தலைவரின் ஆளுமையை கடுமையாக பாதிக்கும். ஆகவே அரசியல் அதிகாரம் எந்த அளவிற்கு முக்கியமோ அதே அளவிற்கு அந்த அதிகாரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிற பிரதிநிதிகளுக்கு உரிய பொருளாதார அதிகாரத்தையும் இணைந்து வழங்கினால்தான் அரசியல் பிரதிநிதித்துவத்தை உரிய முறையில் செயல்படுத்த முடியும். ஆகவே இதுகுறித்த விரிவான விளக்கமான கலந்தாய்வு தேசிய அளவிலும் மாநில அளவிலும் நடத்தப்பட வேண்டும்.

## தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகளும் மீறல்களும்

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 தலித் பஞ்சாயத்து தலைவர்களும் தங்கள் மீது பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுகின்றன என்று கூறியுள்ளனர். இவற்றில் 93 (54 சதவீதம்) பஞ்சாயத்து தலைவர்கள் துணைப் பஞ்சாயத்து தலைவராலும், 51 (30 சதவீதம்) பஞ்சாயத்து தலைவர்கள் எழுத்தராலும் பாகுபாடுகள் கடைபிடிக்கப்படுவதாக கூறியுள்ளனர். இதுமட்டுமல்லாமல் சாதி இந்து உறுப்பினர்களால் 95 பஞ்சாயத்து தலைவர்களும், தலித் உறுப்பினர்களால் 27 பஞ்சாயத்து தலைவர்களும், குறிப்பிட்ட சாதி இந்து வன்கொடுமை கும்பலால் 76 பஞ்சாயத்து தலைவர்களும், 42 பஞ்சாயத்து தலைவர்கள் அரசியல் கட்சியினரால் பாதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

தங்கள் மீது சாதிய ரீதியான அணுகுமுறை காட்டப்படுவதாக 145 (85 சதவீதம்) பஞ்சாயத்து தலைவர்கள் கூறியுள்ளனர். சாதிய ரீதியாக இழிவு சொல்லுக்கு உள்ளாக்கப்படுகிற பஞ்சாயத்து தலைவர்களின் எண்ணிக்கை 104 (61 சதவீதம்). தங்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை 124

தலைவர்களும், தீர்மானத்தில் குறுக்கீடு செய்கிறார்கள் என்று 133 தலைவர்களும், பணி செய்யவிடாமல் குறுக்கீடு செய்கிறார்கள் என்று 141 தலைவர்களும் கூறியுள்ளனர். அலுவலகத்திற்குள் விட மறுக்கிறார்கள் என்று விழுப்புரம் மாவட்டம் சேந்தமங்கலம் க. செல்வராஜ், கடலூர் மாவட்டம் க. கீரனூர் பஞ்சாயத்து தலைவர் செல்வராஜ், திண்டுக்கல் மாவட்டம், புளியூர்நத்தம் பஞ்சாயத்து தலைவர் சண்முகசுந்தரம் உள்ளிட்ட 4 பஞ்சாயத்து தலைவர்கள் கூறியுள்ளனர். இதேபோன்று பஞ்சாயத்து அலுவலகத்தை பூட்டி வைத்துக் கொள்வதாக திண்டுக்கல் மாவட்டம், வாகரை பஞ்சாயத்து தலைவர் சின்னாள், ஈரோடு மாவட்டம், குப்பாண்டம்பாளையம் குப்பாயி உள்ளிட்ட 5 பஞ்சாயத்து தலைவர்கள் எங்களது ஆய்வில் தெரிவித்துள்ளனர். பதிவேடு மறைத்து வைப்பதாக 25 பஞ்சாயத்து தலைவர்களும், கட்டாயப்படுத்தி கையொப்பமிட வைப்பதாக 25 பஞ்சாயத்து தலைவர்களும், கிராம சபை கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதி மறுப்பதாக 10 பஞ்சாயத்து தலைவர்களும், குழுவாக சேர்ந்துகொண்டு ஒதுக்கி வைப்பதாக 5 பஞ்சாயத்து தலைவர்களும், ஆபாசமாக பேசுவதாக 68 பஞ்சாயத்து தலைவர்களும் கூறுகின்றனர்.

திண்டுக்கல் மாவட்டம், அதிகோம்பை பஞ்சாயத்து தலைவர் திருமிகு. பேபி, திண்டுக்கல் மாவட்டம், புளியூர் நத்தம் பஞ்சாயத்து தலைவர் சண்முகசுந்தரம், மதுரை மாவட்டம், இலங்கியேந்தல் பஞ்சாயத்து தலைவர் முத்துச்செல்வி உள்ளிட்ட 4 பஞ்சாயத்து தலைவர்கள் மீது தாக்குதல் நடந்ததாகவும் ஆய்வில் தெரிய வருகிறது.

பொது பங்கேற்பில் அனுமதி மறுக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களின் எண்ணிக்கை 44. தங்களைப் பற்றி அரசு அதிகாரிகளிடம் தவறான தகவல்களை தருகிறார்கள் என்று 61 பஞ்சாயத்து தலைவர்கள் கூறுகின்றனர். ஆக்கிரமிப்பை அகற்ற ஒத்துழைக்க மறுப்பதாக 101 பஞ்சாயத்து தலைவர்களும், வளர்ச்சி திட்டங்களில் உறுதுணையாக இல்லாமல் தங்களை புறக்கணிப்பதாக 105, தலித் மக்களின் மேம்பாட்டிற்கு உதவ மறுக்கிறார்கள் என்று 138 பஞ்சாயத்து தலைவர்களும் கூறுகின்றனர்.

இதேபோன்ற காசோலையில் கையெழுத்திட மறுப்பதாக 65 தலைவர்களும், நாற்காலியில் உட்கார அனுமதி மறுக்கிறார்கள் என்று 7 பஞ்சாயத்து தலைவர்களும்; தேசிய கொடி ஏற்ற அனுமதி மறுக்கிறார்கள் என்று 6 பஞ்சாயத்து தலைவர்களும் கூறுகின்றனர். தங்களை இழிதொழில் செய்ய கட்டாயப்படுத்துகிறார்கள் என்று 2 பஞ்சாயத்து தலைவர்களும், பஞ்சாயத்திற்கான திட்டங்களை தெரியப்படுத்த மறுக்கின்றனர் என்று 45 பஞ்சாயத்து தலைவர்களும், ஊராட்சி பெயர் பலகையில் தங்களின் பெயரை புறக்கணிக்கின்றனர் என்று 13 பஞ்சாயத்து தலைவர்களும் கூறுகின்றனர்.

தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது 25க்கும் மேற்பட்ட பாகுபாட்டின் வகைகள் கடைபிடிக்கப்பட்டு வருவது கண்டறிய முடிகிறது. ஆகவே தலித் ஒருவர் பஞ்சாயத்து தலைவராக பொறுப்பிற்கு வந்தாலும் அவர்கள் மீதான சாதிய வன்கொடுமை தொடர்ந்து நடத்தப்பட்டு வருவது இவ்வாய்வின் மூலம் தெரிய வருகிறது.

இம்மீறல்களுக்கு இடையே 118 (69 சதவீதம்) பஞ்சாயத்து தலைவர்கள் தங்களது பஞ்சாயத்தில் வளர்ச்சி திட்டங்களை கொண்டு சென்றிருக்கிறோம் என்று உறுதி கூறுகின்றனர். தங்களது பஞ்சாயத்தில் தீண்டாமை ஒழிப்பு குறித்து நடவடிக்கை எடுத்தீர்களா ? என்று எமது குழுவினர் கேட்டபோது 168 (98 சதவீதம்) பஞ்சாயத்து தலைவர்கள் இல்லை என்று தங்களது பதிலை கூறியுள்ளனர். தீண்டாமை ஒழிப்பிற்கு பஞ்சாயத்து உறுப்பினர்கள் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறார்களா ? என்று கேட்டதற்கு 165 (96 சதவீதம்) பேர் இல்லை என்கிற பதிலை தெரிவித்துள்ளனர்.

## பஞ்சாயத்தும் குத்தகை விபரமும்

ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 171 பஞ்சாயத்தில் 100 பஞ்சாயத்தில் குத்தகை விடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இவற்றில் 83 சதவீத குத்தகையை தலித் அல்லாதோரும், 17 சதவீத குத்தகையை தலித்துகளும் எடுத்துள்ளனர்.

பஞ்சாயத்து தலைவர் தேர்தலில் போட்டியிடுகிறபோது தங்களுக்கு சாதி ரீதியான குறுக்கீடுகள் இருந்ததாக 119 பஞ்சாயத்து தலைவர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளனர். இதுமட்டுமல்லாமல் பஞ்சாயத்து நிர்வாகம் குறித்து பஞ்சாயத்து தலைவர்கள் மீது 7 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தலித் பஞ்சாயத்து தலைவர்கள் வன்கொடுமைக்கு எதிராக 8 வழக்கினை பதிவு செய்திருக்கின்றனர்.

தாங்கள் திறம்பட பணி செய்வதற்கு அரசு தரப்பில் ஒத்துழைப்பு கொடுக்கப்படுகின்றன என்று 148 (86.5 சதவீதம்) பஞ்சாயத்து தலைவர்கள் கூறியுள்ளனர். இவர்களில் 124 பஞ்சாயத்து தலைவர்கள் விரிவாக்க அலுவலர் தமக்கு உறுதுணையாக உள்ளனர் என்று கூறியிருக்கின்றனர். வட்டார வளர்ச்சி அலுவலர் ஒத்துழைப்பதாக 150 பஞ்சாயத்து தலைவர்களும், ஊராட்சி துணை இயக்குனர் ஒத்துழைப்பதாக 115 பஞ்சாயத்து தலைவர்களும், மாவட்ட ஆட்சியர்

ஒத்துழைப்பதாக 105 பஞ்சாயத்து தலைவர்களும், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஒத்துழைப்பதாக 137 பஞ்சாயத்து தலைவர்கள் தங்கள் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

### தேசிய கொடி ஏற்ற அனுமதி மறுப்பு

விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், திருநாவலூர் ஒன்றியத்திற்குட்பட்ட சேந்தநாடு ஊராட்சிமன்ற தலைவர் திரு. அறிவுக்கரசு எமது குழுவினரிடம், கடந்த ஜனவரி 26, 2012 அன்று சேந்தநாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் தன்னை தேசிய கொடி ஏற்றவிடாமல் சாதி இந்துவான திரு. செண்பகராமன் என்பவர் தடுத்தார் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

### பஞ்சாயத்து நாற்காலியில் அமரவும் அலுவலகத்திற்கு செல்லவும் தடை

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டத்திற்கு உட்பட்டது புளியூர்நத்தம் பஞ்சாயத்து, இதன் தலைவர் சண்முகசுந்தரம் எமது குழுவினரிடம், நான் கடந்த அக்டோபர் 2011ல் புளியூர் நத்தம் பஞ்சாயத்து தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அதுமுதல் பஞ்சாயத்து துணைத் தலைவரான திரு. சடையப்பன் என்பவர் என் மீது பல்வேறு வன்கொடுமைகளை நடத்தி வருகிறார். நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட நாள் முதல் இதுவரை பஞ்சாயத்து தலைவர் நாற்காலியில் உட்காரவும் இல்லை. பஞ்சாயத்து அலுவலகத்திற்கு செல்லவும் முடியவில்லை. அதுமட்டுமல்லாமல் பஞ்சாயத்து பணிகளை திறம்பட செய்வதற்கு சடையப்பன் குறுக்கீடு செய்கிறார். என் தந்தை முருகேசன் அவர்கள் 2006ல் நடந்த பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்று தலைவராக இருந்தார். என் தந்தையும் பல்வேறு அவமானங்களுக்கு உட்படுத்தப்பட்டார் என்று கூறினார்.

இதேபோன்று விழுப்புரம் மாவட்டம், சேந்தமங்கலம் பஞ்சாயத்து தலைவர் திரு.கனக அன்பேத் எமது குழுவினரிடம், இதுவரை நான் பஞ்சாயத்து அலுவலகத்திற்கே சென்றதில்லை. நாற்காலியில் உட்கார்ந்தும் பணி செய்ய முடியவில்லை. இப்பகுதி சாதி இந்துக்கள் என்னை சாதிய ரீதியாக இழிவாகப் பேசி வருகின்றனர் என்று கூறினார்.

### பஞ்சாயத்து தலைவர் மீது கொடூர தாக்குதல்

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், அப்பனூத்து பஞ்சாயத்து தலைவர் திரு.முத்தன் எமது குழுவினரிடம், ஊராட்சி துணைத் தலைவர் பதவிக்கு சாதி இந்துக்களான தங்கராசு, சேதுபதி கவுண்டர் ஆகிய இருவரும் தங்களது உறவினர் ஒருவரை நியமிக்க முயற்சி செய்தனர். ஆனால் தலித் பெண் ரேகா என்பவர் துணை பஞ்சாயத்து தலைவர் ஆனார். இதனால் ஆத்திரமடைந்த சாதி இந்து வன்கொடுமை என் மீது தாக்குதல் நடத்தியது. இதுகுறித்து கிரணூர் காவல்நிலைய குற்ற எண்.345/2011 பிரிவுகள் 341, 323, 506(1) இ.தச. மற்றும் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதனால் மேற்குறிப்பிட்ட வன்கொடுமை கும்பல் என்னை சாதி ரீதியாக இழிவாகப்பேசி வருவது மட்டுமல்லாமல் கொலை மிரட்டலும் விடுத்து வருகின்றனர் என்று கூறினார்.

### பதிவேடுகள் கொடுக்காமல் நிர்வாக குறுக்கீடு

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், டி.கல்லுப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்டது கொட்டானிப்பட்டி பஞ்சாயத்து. இதன் தலைவர் திரு.ஜனகர் (50) த.பெ.பொன்அழகிரி எமது குழுவினரிடம், பஞ்சாயத்து எழுத்தரான திரு.முருகேஸ்வரி என்பவர் பஞ்சாயத்து பதிவேடுகளை தம்மிடம் கொடுக்காமல் தானே வைத்துக் கொண்டிருக்கிறார். இதுகுறித்து எழுத்தர் முருகேஸ்வரியிடம் பஞ்சாயத்து பதிவேடுகளை கொடுங்கள் என்று நான் பலமுறை கேட்டதற்கு, உனக்கெல்லாம் பதிவேடு கொடுக்க முடியாது. நான் கையெழுத்துப் போடச் சொன்னால் நீ பேசாமல் கையெழுத்துப்போடு என்று கூறி வருகிறார். இதுகுறித்து நான் மதுரை மாவட்ட ஆட்சியரிடம் 19.11.2011 அன்று புகார் கொடுத்தேன். மாவட்ட ஆட்சியரும் ஊராட்சி துறை இயக்குனர், வட்டார வளர்ச்சி அலுவலருக்கு எனது புகாரினை விசாரிக்குமாறு அறிவுறுத்தியிருந்தார். ஆனால், இதுவரை என்னிடம் விசாரணை மேற்கொள்ளவில்லை. நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

### பஞ்சாயத்து தலைவருக்கு தெரியாமலேயே குத்தகை நடத்திய கொடுமை

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனம் ஒன்றியத்திற்குட்பட்ட கீழடி பஞ்சாயத்து தலைவர் திருமிகு. ஜானகி எமது குழுவினரிடம், பஞ்சாயத்து துணைத் தலைவரான திருமிகு. தீபா என்பவரின் கணவர் கருப்புசாமி என்பவர் என்னிடம் தொடர்ந்து தகராறில் ஈடுபட்டு வருகிறார். என் மீதும் என் கணவர் மீதும் கருப்புசாமி காவல்நிலையத்தில் பொய்யான புகாரினை கொடுத்து வருகிறார். இதுமட்டுமல்லாமல் வேங்கடசுப்பிரமணி என்கிற சாதி இந்துவின் தலைமையில் தான் அனைத்து நலத்திட்டங்களும் நடைபெற வேண்டும். நீ பஞ்சாயத்து நிர்வாகத்தில் தலையீடு செய்யக்கூடாது என்று மிரட்டி வருகிறார்.

இதுமட்டுமல்லாமல் ஊர் பொது கண்மாயை எனக்கு தெரியாமலேயே வேங்கடசுப்பிரமணி உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் குத்தகை விட்டுள்ளனர் என்று கூறினார்.

### சாதி இந்துக்களின் கட்டுப்பாட்டில் பஞ்சாயத்து அலுவலகமும், ஆவணங்களும்

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், காடனேரி கிராமத்தில் வசித்து வரும் பஞ்சாயத்து தலைவர் திரு.பெருமாள் எமது குழுவினரிடம், காடனேரி துணைப் பஞ்சாயத்து தலைவர் பாண்டி மற்றும் எழுத்தர் சுரேஷ் ஆகிய இருவரும் பஞ்சாயத்து அலுவலகம் முதல் ஆவணங்கள் வரை அனைத்தையும் அவர்களது கட்டுப்பாட்டிலேயே வைத்துள்ளனர். பஞ்சாயத்து தலைவருக்கான இருக்கையில் கூட என்னால் சுயமாக அமர முடியவில்லை என்று கூறினார். இதுமட்டுமல்லாமல் நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பஞ்சாயத்து எல்லையில் என் பெயர் கொண்ட பலகையை வைத்தேன். அதனை பொறுத்துக் கொள்ள முடியாத சாதி இந்துக்கள் அந்த பலகையை அடித்து நொறுக்கினர் என்று கூறினார்.

### பஞ்சாயத்திற்கு வரும் நிதியை துணைத் தலைவரும் உறுப்பினர்களும் செலவு செய்கிற அவலம்

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருவிடைமருதூர் ஒன்றியத்திற்கு உட்பட்டது துக்காச்சி குமாரமங்கலம் பஞ்சாயத்து. இதன் பஞ்சாயத்து தலைவர் திரு.கலியமூர்த்தி எமது குழுவினரிடம், சாதி இந்துவான துணைத் தலைவரும் உறுப்பினர்களும் அரசு வழங்கக்கூடிய திட்டங்கள் அனைத்தையும் அவர்களே செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். பஞ்சாயத்திற்கு வருகின்ற நிதிகளை அவர்களே எடுத்து வேலை செய்ய கட்டாயப்படுத்தி என்னிடம் கையெழுத்து வாங்குகிறார்கள். இது முறையில்லை என்று நான் எதிர்ப்பு தெரிவித்தால், உன் மீது காவல் நிலையத்தில் பொய் வழக்கு பதிவு செய்வோம் என்று மிரட்டுகிறார்கள் என்று கூறினார்.

### ஆய்வின் முடிவுகள்

தமிழகத்தில் ரிசர்வ் பஞ்சாயத்துகளின் மூலம் 3136 தலித் பஞ்சாயத்து தலைவர்கள் உள்ளனர். இவர்களில் 167 பஞ்சாயத்து தலைவர்களை எமது குழுவினர் ஆய்வு செய்துள்ளனர். பொது தொகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 4 தலித் பஞ்சாயத்து தலைவர்களையும் எமது குழுவினர் ஆய்விற்கு எடுத்துக் கொண்டுள்ளனர். ஆய்வின் மூலம் தலித் பஞ்சாயத்து தலைவர்கள் கடந்த 6 மாத காலமாக சுதந்திரமாக தன்னிச்சையாக செயல்பட முடியாத நிலையில் இருப்பது கண்டறிய முடிகிறது. கிராமங்களில் நிலவக்கூடிய சாதிய ஆதிக்கம், சாதி இந்துக்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய அரசு அதிகாரிகள், சாதிய மயமாகிப்போன அரசியல் சூழல்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகளில் தலித் பஞ்சாயத்து தலைவர்கள் அவதிப்பட்டு வருவது கண்டறிய முடிகிறது. 6 மாதத்தில், ஏன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்கிற ஒருவிதமான சலிப்போடு மனக்குமுறலோடு பஞ்சாயத்து தலைவர்கள் நிர்வாகப் பணியில் ஈடுபட்டு வருவது கண்டறிய முடிகிறது. இதுமட்டுமல்லாமல். எமது ஆய்வில் பல பஞ்சாயத்து தலைவர்கள் தங்கள் மீது பல்வேறு விதமான சாதிய கொடுமைகள் நடக்கின்றன. ஆனால், தற்போது அவற்றை நாங்கள் வெளியே சொல்ல முடியாத நிலையில் தவித்து வருகிறோம் என்றும் கூறினார்கள். அவர்களது வாக்குமூலங்கள் எமது ஆய்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகளையும் நிர்வாக குறுக்கீடுகளையும் தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே நேரத்தில் தங்களுக்கு ஏற்படக்கூடிய நிர்வாக குறுக்கீடுகள் மற்றும் சாதியப்பாகுபாடுகளை தைரியமாக வெளியே சொன்னால் தங்களுக்கு அரசு அதிகாரிகளும், சாதியக் குழுக்களும் பல்வேறு விதமான நெருக்கடிகள் கொடுப்பார்கள் என்கிற அச்சமும் பஞ்சாயத்து தலைவர்களிடையே உள்ளன. கடந்த 2006ம் ஆண்டு எமது எவிடன்ஸ் அமைப்பு தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வறிக்கை பத்திரிகைகளில் வந்தவுடன் அரசு அதிகாரிகள் பாதிக்கப்பட்ட பஞ்சாயத்து தலைவர்களை சந்தித்து விசாரணை நடத்தினர். ஆனால், பஞ்சாயத்து தலைவர்களுக்கான பிரச்சனைகளை தீர்ப்பதற்கான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

தமிழகத்தில் கடந்த 2006ல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது பல்வேறு விதமான கொடுமைகளும் சித்திரவதைகளும் கடைபிடிக்கப்பட்டு வந்தன. குறிப்பாக திருநெல்வேலி, தாழையூத்து பஞ்சாயத்து தலைவர் கிருஷ்ணவேணி அவர்கள் மீது கடந்த 13.6.2011 அன்று கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர

ஆயுதங்களைக் கொண்டு கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதேபோன்று சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை அருகில் உள்ள கள்ளங்குடி பஞ்சாயத்து தலைவர் பூமயில் அவர்களை 3.11.2010 அன்று சாதி இந்து வன்கொடுமை கும்பல் பொது இடத்தில் வைத்து ஆடைகளை கிழித்து செருப்பால் தாக்கி அவமானப்படுத்தினர்.

பல தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது சாதி இந்துக்களால் பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை ஏராளம். ஆகவே தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகளையும் நிர்வாக குறுக்கீடுகளையும் தடுப்பதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் வருங்காலங்களில் தலித் தலைவர்கள் மீதான கொடுமைகளும் மீறல்களும் அதிகரிக்கக்கூடிய ஆபத்து ஏற்பட்டுவிடும்.

பெயரளவில் மட்டுமே தலித் ஒருவர் தலைவராக இருப்பதைவிட, ஜனநாயக பூர்வமாக சுதந்திரமாக தன்னிச்சையாக தலித் ஒருவர் பஞ்சாயத்து தலைவராக செயல்பட்டால்தான் சமூக நீதி உறுதிப்படுத்தப்படும். இதனடிப்படையில் சில பரிந்துரைகளை எமது எவிடன்ஸ் அமைப்பு அரசிற்கு முன்வைக்க விரும்புகிறது.

**பரிந்துரைகள்**

தலித் பஞ்சாயத்து தலைவர்களுக்கு சமூகநீதி, நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, வளர்ச்சி திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிலைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்

தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது நடக்கக்கூடிய பாகுபாடுகள் சித்திரவதைகள் சம்பந்தமாக மூன்று மாதத்திற்கு ஒருமுறை தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மட்டுமே பங்கேற்கக்கூடிய குறைகேட்பு கூட்டத்தினை ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலித் பஞ்சாயத்து தலைவர்களாக இருக்கக்கூடிய பெரும்பாலான பஞ்சாயத்துகளில் துணைத் தலைவரும் எழுத்தரும் சாதி இந்துக்களாக உள்ளனர். இதனால் தலித் தலைவர்கள் சுதந்திரமாக செயல்படமுடியாத அவதிக்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆகவே ரிசர்வ் தொகுதிகளுக்கு மட்டும் தலித் தலைவர்களுக்கான தன்னிச்சை அதிகாரம் கூடுதலாக வழங்குவதற்கு அரசு சிறப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். ரிசர்வ் பஞ்சாயத்துகளின் துணைத் தலைவர் மற்றும் எழுத்தர் ஆகியோர் தலித்துகளாக நியமனம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ரிசர்வ் தொகுதியில் தேர்ந்தெடுக்கப்படுகிற தலித்துகள், தலித் பெண்கள், பழங்குடியினர், பெண்கள் உள்ளிட்டோர் குடும்ப ஆதிக்கத்திலிருந்தும் சாதி ஆதிக்கத்திலிருந்தும் கடந்து சுதந்திரமாக பஞ்சாயத்து நிர்வாகம் செய்வதற்கு அரசு சில கண்காணிப்பு முறைகளை உருவாக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் இத்தகைய பஞ்சாயத்து தலைவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ஊக்கத்தொகை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கிராம பஞ்சாயத்தில் எடுக்கப்படுகிற குத்தகை 25 சதவீதம் தலித்துகளுக்கு வழங்குவதற்கு அரசு சிறப்பு உத்தரவினை வெளியிட வேண்டும்.

**பெயரளவில் மட்டுமே தலித் ஒருவர் தலைவராக இருப்பதைவிட, ஜனநாயக பூர்வமாக சுதந்திரமாக தன்னிச்சையாக தலித் ஒருவர் பஞ்சாயத்து தலைவராக செயல்பட்டால்தான் சமூக நீதி உறுதிப்படுத்தப்படும். தலித் பஞ்சாயத்து தலைவர்களுக்கு சமூகநீதி, நிர்வாகம், பொருளாதார மேம்பாடு, வளர்ச்சி திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிலைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்**

தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான வன்கொடுமைகளை தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989ன் கீழ் பதிவு செய்வதற்கு அரசு சிறப்பு உத்தரவினை வெளியிட வேண்டும்.

தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்கிற வன்கொடுமை கும்பல் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(8), 3(1)(9) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

**ஆதாரம்: EVIDENCE**

தலித் பஞ்சாயத்து தலைவர்கள் மீதான பாகுபாடுகள்

# தலித் ஊராட்சிமன்றத் தலைவர் – பணி செய்ய தடை

**அனுப்புநர்,**

கண்ணன் (62),
த/பெ. பூங்கான் (லேட்),
வரஞ்சரம் ஊராட்சி மன்றத் தலைவர்,
க.எண்.3/25, காலனி நடுத் தெரு,
வரஞ்சரம் கிராமம்,
வரஞ்சரம் அஞ்சல்,
கள்ளக்குறிச்சி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம்,

**பொறுநர்,**

திருமிகு. காவல்துறை இயக்குநர் (DGP),
காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை 600 004.

**ஐயா,**

**பொருள்:** தியாகதுருவம் ஒன்றியம் – வரஞ்சரம் ஊராட்சிமன்றத் தலைவராக நான் கடந்த 2006ம் ஆண்டு முதல் தற்போது வரை இருந்து வருகின்றேன் – நான், தாழ்த்தப்பட்ட இந்து ஆதிதிராவிடர் பறையர் சமூகத்தைச் சேர்ந்தவன் – வரஞ்சரம் பஞ்சாயத்தானது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ரிசர்வு தொகுதியாகும் – நான் பஞ்சாயத்து தலைவராக பதவி பொறுப்பேற்ற நாளிலிருந்து வரஞ்சரம் கிராம முக்கியஸ்தர்களும், சாதி இந்துக்களுமான திரு.நாராணயன் ஆசிரியர் (50) த/பெ. லட்சுமணஉடையார், திரு. ராஜேந்திரன் (55) த/பெ. சுப்பிரமணியன், திரு. தட்சணாமூர்த்தி (50) த/பெ. பொன்னுசாமி உடையார் ஆகியோர் என்னை பஞ்சாயத்து பணிகளை சுதந்திரமாக செயல்படுத்தவிடாமல் தொடர்ந்து இடையூறு செய்து வருகின்றனர் – மேலும் பஞ்சாயத்து சம்பந்தமான வளர்ச்சி திட்டங்களில் வருகின்ற நிதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை கமிஷனாகத் தர வேண்டும் என்று மிரட்டி வருகின்றனர் – பஞ்சாயத்து சம்பந்தமான காண்ட்ராக்ட் மற்றும் டெண்டர் விஷயங்களில் என்னை தலையிடக்கூடாது என்று கூறி வருகின்றனர் – இதுகுறித்து நியாயம் கேட்டால் என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசுவது, கொலை செய்து விடுவதாக மிரட்டுவது, என் மீது பொய்யான புகார்களை அதிகாரிகளுக்கு கொடுப்பது உள்ளிட்ட பல்வேறு விதமான வன்கொடுமைகளில் ஈடுபட்டு வருகின்றனர் – எனவே தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவராகிய என்னை சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்படுத்தவிடாமல் தொடர்ந்து சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்படுத்தவிடாமல் தொடர்ந்து இடையூறு செய்து வரும் சாதி இந்துக்களான திரு.நாராயணன், திரு.ராஜேந்திரன், திரு.தட்சணாமூர்த்தி உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் மீது, தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989–ன் கீழ் வழக்கு பதிவு செய்து, தக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி மற்றும் பாதுகாப்பு வழங்குவது குறித்து .

நான், மேற்கண்ட முகவரியில் என் மனைவி லட்சுமி (54), மகன் சிவராமன் ஆகியோருடன் வசித்து வருகின்றேன். எனது மூத்த மகன் சீனிவாசன் (35) மற்றும் மகள்களான உமா (33), லதா (31), முத்துலட்சுமி (29) ஆகியோர் திருமணமாகி தனித்தனியே வசித்து வருகின்றனர். நான் தாழ்த்தப்பட்ட இந்து பறையர் சமூகத்தைச் சேர்ந்தவன். கடந்த 2006ம் ஆண்டு முதல் தற்போது வரை வரஞ்சரம் பஞ்சாயத்து தலைவராக பதவி வகித்து வருகின்றேன்.

வரஞ்சரம் பஞ்சாயத்தானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட ரிசர்வு தொகுதியாகும். சுமார் 1150 வாக்குகளைக் கொண்ட தனிப் பஞ்சாயத்தாகும்.

கடந்த 2006ம் ஆண்டு நடைபெற்று முடிந்த ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் கிராம முக்கியஸ்தர்களும், சாதி இந்துக்களுமான திரு. நாராயணன் ஆசிரியர் (50) த/பெ. லட்சுமணன் உடையார், திரு. ராஜேந்திரன் (55) த/பெ. சுப்பிரமணியன், திரு. தட்சணாமூர்த்தி (50) த/பெ. பொன்னுச்சாமி உடையார் ஆகியோர் என்னிடம் வந்து உன்னை பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு அன்னபோஸ்டாக நியமிக்க ஊர் பொது மக்கள் முடிவு செய்துள்ளோம். எனவே, நீதான் பஞ்சாயத்து தலைவர். இனிமேல் நாங்கள் சொல்வதை கேட்டுத்தான் நீ நடக்க வேண்டும். பஞ்சாயத்து நிர்வாகங்களை நாங்கள் கவனித்துக் கொள்கிறோம். நீ எங்களுக்கு பினாமியாக இருந்து, நாங்கள் சொல்லும் இடத்தில் கையெழுத்து மட்டும் போட்டால் போதும். மற்றவைகளை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கூறி, என்னை தலைவராக தேர்ந்தெடுத்தனர். நான் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு மேற்குறிப்பிட்ட சாதி இந்து வன்கொடுமை கும்பலுக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் பஞ்சாயத்து பணிகளை திறமையாக செய்துவந்தேன். இதனால் ஆத்திரமடைந்த திரு. நாராயணன் உள்ளிட்ட சாதி இந்து வன்கொடுமை கும்பல் என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசியது மட்டுமல்லாமல், அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் இருந்து வந்தனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 2011ம் ஆண்டு செப்டம்பர் மாதம் மீண்டும் ஊராட்சிமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டது. ஊராட்சி மன்றத் தேர்தலில் தலைவர் பதவிக்கு போட்டியிடுவதற்காக மீண்டும் நான் வேட்பு மனு தாக்கல் செய்தேன். என்னுடன் பஞ்சாயத்து தேர்தலில் போட்டியிடுவதற்காக எங்கள் சமூகத்தைச் சேர்ந்த திரு. குழந்தைவேலு (50) த/பெ. செல்லமுத்து, திருமிகு. மாரிமுத்து (45) க/பெ. முருகன் ஆகியோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். வேட்பு மனு தாக்கல் செய்துள்ள 3 நபர்களில் திரு. குழந்தைவேலு என்பவருக்கு மட்டும் ஆதரவு தெரிவிப்பது என்று சாதி இந்துக்களான திரு. நாராயணன், திரு. ராஜேந்திரன், திரு. தட்சணாமூர்த்தி உள்ளிட்ட சாதி இந்து வன்கொடுமை கும்பல், ஊர் கூட்டம் போட்டு தங்களின் அரசியல் ஆதாயத்திற்காக முடிவு செய்தனர்.

அதன்பின்னர் சாதி இந்துவான திரு. நாராயணன் அவர்களின் வற்புறுத்தலினால் திரு. குழந்தைவேலு அவர்கள் வேட்பு மனு தாக்கல் செய்தார். திரு. குழந்தைவேலு அவர்கள் பஞ்சாயத்து தேர்தலில் வெற்றி பெற்றால் பஞ்சாயத்து நிதிகளில் ஒரு குறிப்பிட்ட தொகையை தருவதாக ஆசை வார்த்தை கூறி அவரை வேட்பாளராக நிறுத்தினர். மேலும் பஞ்சாயத்து கணக்கு வழக்குகளில் நீ தலையிடக்கூடாது. நாங்கள் சொல்லுவதைத்தான் நீ கேட்க வேண்டும். நாங்கள் சொல்லும் இடத்தில் நீ கையொப்பம் போட வேண்டும் என்று சாதி இந்துவான திரு. நாராயணன் உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் திரு. குழந்தைவேலுவிடம் நிபந்தனை விதித்தனர். தேர்தலின் இறுதியில் சுமார் 21 வாக்குகள் வித்தியாசத்தில் நான் வெற்றி பெற்றேன். கடந்த 21.10.2011 அன்று நான் பஞ்சாயத்து தலைவராக பதவியேற்றேன். இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சாதி இந்துவான திரு. நாராயணன் உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் என்னிடம் வந்து, ஏண்டா பற நாயே, வெற்றி பெற்றுவிட்டோம் என்று திமிராக இருக்காதே. நீ எப்படி பஞ்சாயத்து பணிகளை முழுமையாகவும், சுதந்திரமாகவும் செய்கின்றாய் என்று பார்ப்போம். எங்களை மீறி இந்த முறை நீ பஞ்சாயத்து நிர்வாகங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசியது மட்டுமல்லாமல் மிரட்டி விட்டும் சென்றனர்.

இந்நிலையில் திரு. நாராயணன் உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் கடந்த 6 மாத காலமாக அடிக்கடி என்னிடம் வந்து, பஞ்சாயத்து சம்பந்தமான வளர்ச்சி திட்டங்களில் வரும் நிதிகளில் தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் உன்னை பஞ்சாயத்து பணிகளை செய்ய விடமாட்டோம் என்றும் மிரட்டி வருகின்றனர். மேலும் பஞ்சாயத்து சம்பந்தமான காண்ட்ராக்ட் மற்றும் டெண்டர் விஷயங்களில் நீ தலையிடக்கூடாது. அதை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம் என்று கூறி வருகின்றனர். இதற்கு நீ ஒத்துழைப்பு தர மறுத்தால் ஊருக்குள் உன்னையும், உன் குடும்பத்தினரையும் நிம்மதியாக வாழ விடமாட்டோம். டிராக்டர் வண்டியை உங்கள் மீது ஏற்றி கொலை செய்துவிடுவோம் என்றும் தொடர்ந்து மிரட்டி வருகின்றனர்.

இறுதியாக கடந்த 22.11.2011 அன்று சாதி இந்துவான திரு. நாராயணன் உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் பஞ்சாயத்து நிதிகளில் நான், முறைகேடு செய்து வருவதாக கூறி, எங்கள் சமூகத்தைச் சேர்ந்த திரு. தேசிங்குராஜா (35) த/பெ. களியன் என்பவர் மூலம் தியாகதுருவம் வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் என் மீது பொய் புகார் கொடுக்க வைத்துள்ளனர். நான் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவன் என்கிற ஒரே காரணத்திற்காக பஞ்சாயத்து தலைவர் என்கிற மரியாதையை எனக்கு கொஞ்சம் கூட தருவதில்லை. பஞ்சாயத்து தலைவரான நான், சாதி இந்துவான திரு. நாராயணன் உள்ளிட்ட வன்கொடுமை கும்பலினால் பாதிக்கப்பட்டு, பஞ்சாயத்து பணிகளை திறமையாகவும், சுதந்திரமாகவும் செயல்படுத்த முடியாமல் மிகுந்த மன உளைச்சலில் இருந்து வருகின்றேன். மேலும் சாதி இந்துக்களான திரு. நாராயணன், திரு. ராஜேந்திரன், திரு. தட்சணாமூர்த்தி உள்ளிட்ட கும்பல்களால் எனக்கும்,

என் குடும்பத்தினருக்கும் எந்த நேரத்திலும் உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று அச்சமாக உள்ளது.

ஆகவே கனம் சமூகம் அவர்கள், தாழ்த்தப்பட்ட இந்து பறையர் சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவரான என்னை சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்படவிடாமல் சாதியப் பாகுபாட்டுடன், கொலை மிரட்டல் விடுத்து வரும் சாதி இந்துக்களான திரு. நாராயணன், திரு. ராஜேந்திரன், திரு. தட்சணாமூர்த்தி உள்ளிட்ட வன்கொடுமை கும்பல் மீது தக்க நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி மற்றும் பாதுகாப்பு வழங்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாள்: 30.04.2012
இடம்: வரஞ்சரம்
இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
(கண்ணன்)
தலைவர் ஊராட்சி மன்றம்
வாஞ்சரம்

**ஆதாரம்: EVIDENCE**

# வளர்ச்சிப் பணிகள் முடக்கம்

## சின்னம்பேடு ஊராட்சி மக்களின் அவலம்

சின்னம் பேடு முதல் நிலை ஊராட்சியின் வளர்ச்சிப் பணிகள் முடக்கப்பட்டுள்ளதால் மக்கள் பெரிதும் பாதிக்கின்றனர். இதனால் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர். சோழவரம் அருகில் உள்ள சின்னம்பேடு முதல் நிலை ஊராட்சியில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். சோழவரம் ஒன்றியத்தில் பெரிய ஊராட்சிகளில் இதுவும் ஒன்று புகழ்பெற்ற முருகன் கோயில் உள்ள இந்த ஊர் விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்கள் நிறைந்த பகுதியாகும். சின்னம்போடு ஊராட்சி பல்வேறு வரலாற்று சிறப்பு அம்சங்களை கொண்டது. இங்கு 9 வார்டுகள் உள்ளன. ஒவ்வொரு வார்டிலும் ஒவ்வொரு பிரச்சனை கொழுந்துவிட்டு எரிகிறது. மக்கள் பிரச்சனைகளை பேசி முடிவெடுக்கும் மாதாந்திர கூட்டம் கடந்த 3 மாதமாக கூட்டவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. நிர்பந்தத்தின் காரணமாக கூடினாலும் பஞ்சாயத்திற்கு எவ்வளவு நிதி வந்துள்ளது. எங்கிருந்து வந்துள்ளது. வளர்ச்சி பணிகள் குறித்து கேட்டாலும் எதற்கும் பதிலில்லை என்கிறார்கள். தெருக்களில் உள்ள கால்வாய்கள், முறையாக பராமரிப்பின்றி சாலைகள் சேரும் சகதியுமாக உள்ளன. மேலும் சுகாதார சீர்கேடும் ஏற்பட்டுள்ளது. இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயமும் உள்ளது.

பொதுக்கழிப்பிடம் இல்லாததால் கிராம வாசிகள் குறிப்பாக பெண்கள் அவதிப்படுகின்றனர். வெளி ஊர்களில் இருந்து கோயிலுக்கு வரும் பக்தர்கள் மிகவும் வேதனைக்குள்ளாகிறார்கள். ஆனால், கழிப்பிடத்திற்காக ஒதுக்கிய நிலத்தை தனியாருக்கு சொந்தமான ஜீவன் ஓட்டல் நிர்வாகம் ஆக்கிரமித்துள்ளதாக கூறப்படுகிறது. இதனை மீட்டு கழிப்பறை கட்ட வேண்டும் என்கிறார்கள். மேலும் ஜீவன் ஓட்டல் நிர்வாகத்தின் கழிவுநீர் சுடுகாட்டில் தேங்குவதால் பிணத்தை புதைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து வார்டு உறுப்பினர்கள் குமார், லட்சுமி செல்வசேகர், கல்பனா தினகரன் ஆகியோர் கூறுகையில், ‘‘பஞ்சாயத்தில் உள்ள அரசு நிலங்களை பஞ்சாயத்து தலைவர் ஆதரவோடு விற்பனை செய்யப்படுகிறது. அனைத்து நிலங்களையும் மீட்டு மனையில்லாதவர்களுக்கு வழங்க வேண்டும். சமூக கூடம் அமைக்க வேண்டும். கால்நடை மருத்துவமனையை மீண்டும் கொண்டுவர வேண்டும். ரேசன் கடையில் மண்ணெண்ணை முறையாக வழங்க வேண்டும். மேலும் சாலைகள் பழுதடைந்துள்ளது. இது சம்பந்தமாக பேச வேண்டும் என தலைவரை கேட்டால் முறையான பதிலில்லை. அப்படி பஞ்சாயத்து கூட்டத்தை கூட்டினாலும் வார்டு உறுப்பினர்களின் கேள்விக்கு பதிலில்லை. தீர்மானம் போடுவதும், நடக்காத கூட்டங்களுக்கு நடந்ததாக கையெழுத்து வாங்கும் முயற்சியில் நிர்வாகம் ஈடுபடுகின்றது’’ என்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளை முறையிட்டால் கண்டு கொள்ளாமல் போங்கள் என்கிறார்களாம். சின்னம்பேடு முதல் நிலை ஊராட்சி வளர்ச்சிப் பணிகள் மேம்பட திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்துள்ளனர். விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

**– ரூபன்**

**ஆதாரம்: தீக்கதிர் (5.5.12)**

# ஏண்டி சக்கிலிய............... மகளே
# உன் மையெடுத்து இருந்தால் மட்டும்தான் விண்ணப்பம் தர வேண்டுமா?

**அனுப்புநர்,**

வள்ளிதெய்வானை (42),
க/பெ. பழனிச்சாமி (லேட்),
க.எண்.9/35, வாய்க்கால்புதூர்,
பகவபட்டி அஞ்சல்,
சென்னிமலை வழி,
பெருந்துறை வட்டம்,
ஈரோடு மாவட்டம்,

**பெறுநர்,**

திருமிகு. காவல்துறை இயக்குநர் (DGP),
காவல்துறை இயக்குநர் அலுவலகம்,
டாக்டர் இராதா கிருஷ்ணன் சாலை,
மயிலாப்பூர்,
சென்னை 600 004.

**ஐயா,**

**பொருள்:** பெருந்துறை வட்டம் – தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த நான், தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பசுவபட்டி ஊராட்சிமன்ற தலைவியாக தேர்தலில் வெற்றி பெற்று பணி செய்து வந்தேன் – இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சாதி இந்துக்களான ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. மோகனசுந்தரம், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் திருமிகு. மணிமேகலை மற்றும் முன்னாள் பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. பெரியசாமி கவுண்டர் ஆகியோர் அடிக்கடி நான் செய்யும் பணிகளை செய்யவிடாமல் தடுத்து வந்தனர் – இந்நிலையில் 1.1.2012 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் பசுவபட்டி ஊராட்சி அலுவலகத்தில் நாற்காலியில் உட்கார்ந்து பணி செய்து கொண்டிருந்தபோது, பசுவபட்டி பஞ்சாயத்து துணைத் தலைவர் திரு.மோகனசுந்தரம், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் திருமிகு. மணிமேகலை மற்றும் முன்னாள் பஞ்சாயத்து தலைவியின் கணவர் திரு. பெரியசாமி கவுண்டர் ஆகியோர், நாற்காலியில் உட்கார்ந்து பணி செய்ய உனக்கு தகுதி இல்லை என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசி, பணிகளை தொடர்ந்து செய்யவிடாமல் தடுத்தனர் – இதுகுறித்து 13.1.2012 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும், 14.1.2012 அன்று சென்னையில் உள்ள தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்திற்கு புகார் தெரிவித்தேன் – அப்புகாரின் அடிப்படையில் 31.1.2012 அன்று பெருந்துறை வட்டாட்சியர் மற்றும் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் விசாரணையில் மேற்கொண்டனர் – ஆனால், இதுநாள் வரைக்கும் சாதி இந்துக்களான திரு.மோகனசுந்தரம், திருமிகு. மணிமேகலை மற்றும் திரு. பெரியசாமி ஆகியோர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை – எனவே, கனம் சமூகம் அவர்கள் தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவரான என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசியும், பணி செய்ய விடாமல் இடையூறு செய்த மேற்குறிப்பிட்ட சாதி இந்துக்கள் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10) & 3(2)(7) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து, தக்க நடவடிக்கை எடுத்து, என்னுடைய பணியை தொடர்ந்து செய்வதற்கு சிறப்பு கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வழங்குவது குறித்து...

நான் மேற்கண்ட முகவரியில் என் மகள் ஷோபனா (22) என்பவருடன் வசித்து வருகின்றேன். என் மகன் கௌரிசங்கர் திருமணமாகி தனியாக வசித்து வருகின்றான். என் மகள் கர்நாடக மாநிலம், பெங்களூரில் உள்ள சி.எஸ்.ஐ. மருத்துவமனையில் பயிற்சி மாணவியாக படித்து வருகின்றாள். நான் தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்தவள். நான் மல்லிகை சுயஉதவிக்குழு என்கிற பெயரில் அப்பகுதியில் உள்ள பெண்களுக்கும், முதியோர்களுக்கும் கடன் மற்றும் கனரா வங்கி தனிநபர் கடன் பெற்றுத் தரும் பணியை செய்து வருகின்றேன்.

நாங்கள் வசித்து வரும் வாய்க்கால்புதூரில் சாதி இந்துவான நாடார் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 50 குடும்பம் மற்றும் தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 60 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

எங்கள் கிராமமான வாய்க்கால்புதூர் கிராமத்திலிருந்து சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள பசுவபட்டி ஊராட்சியானது சுமார் 24 கிராமங்களை உள்ளடக்கியது. இக்கிராமங்களில் திருவள்ளுவர் நகர், கணபதிபாளையம், தட்டாங்காடு, வாய்க்கால் புதூர், பசுவபட்டி, காமராஜபதி, பறையங்காட்டுவலசு, கே.சி.நகர், சென்னிமலைபாளையம், பூச்சக்காட்டு வலசு உள்ளிட்ட 9 வார்டுகளை உள்ளடக்கியது. பசுவபட்டி ஊராட்சியானது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தனி தொகுதியாகும்.

பசுவபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட 9 வார்டுகளில் வாழ்ந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்கள் சாதி இந்துக்களின் கோயில்களில் நுழைய தடை, சாதி இந்துக்களின் முன்பு இருக்கையில் அமர்வதற்கு தடை, தனி மயானம் உள்ளிட்ட தீண்டாமை பாகுபாடுகள் அதிகமாக கடைபிடிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கடந்த 2011ம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் பசுவபட்டி ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு சுயேட்சையாக போட்டியிடுவதற்காக நான் வேட்பு மனு தாக்கல் செய்தேன். நான் வேட்பு மனு தாக்கல் செய்வதை பொறுத்துக்கொள்ள முடியாத சாதி இந்துவான சென்னிமலையில் வசித்து வரும் கொங்குவேளான கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த திருமிகு. மணிமேகலை(46) க/பெ. விஸ்வநாதன் என்பவர், என்னை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சக்கிலிய சமூகத்தைச் சேர்ந்த நீ தேர்தலில் போட்டியிடக்கூடாது. எங்கள் சார்பாக நாங்கள் சொல்லும் நபர்தான் நிற்க வேண்டும் என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசி மிரட்டினார்.

இதற்கிடையில் கடந்த 19.10.2011 அன்று நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தலில் நான் வெற்றிபெற்றேன். தேர்தலில் வெற்றிபெற்றதற்காக சான்றிதழை கடந்த 21.10.2011 அன்று வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்கள் வழங்கினார். சாதி இந்துக்களான கொங்குவேளான கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த திருமிகு. மணிமேகலை அவர்கள் ஈரோடு மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இதனால் திருமிகு.மணிமேகலை என் மீது பகைமை உணர்வுடன் இருந்து வந்தார்.

பின்னர் 25.10.2011 அன்று காலை சுமார் 11.00 மணியளவில் பசுவபட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் சென்னிமலை யூனியன் அலுவலர் திருமிகு. சிவகுமார் அவர்கள் தலைமையில் பசுவபட்டி ஊராட்சி மன்றத் தலைவியாக பதவியேற்றேன். அப்போது பசுவபட்டியில் வசித்து வரும் சாதி இந்துவான திரு. பெரியசாமி (38) த/பெ. பொன்னுச்சாமி கவுண்டர் என்பவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த நீ, எங்களை கேட்டுத்தான் எந்தவொரு பணியையும் செய்ய வேண்டும். மேலும் நீ ஊராட்சி மன்ற தலைவர் நாற்காலியில் அமரக்கூடாது என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசினார்.

அதன்பின்னர் 29.10.2011 அன்று பசுவபட்டி ஊராட்சி மன்ற தலைவியான நானும், 9 வார்டு உறுப்பினர்களும் சேர்ந்து 5வது வார்டு உறுப்பினரும் சாதி இந்துவான திரு. மோகனசுந்தரம் (32) த/பெ. பொன்னுச்சாமி நாடார் என்பவரை பசுவபட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவராக தேர்ந்தெடுத்தோம். அதன்பின்னர் கடந்த 3.11.2011

அன்று மாதாந்திர கூட்டம் பசுவபட்டி ஊராட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அப்போது ஊராட்சிமன்ற துணைத் தலைவர் திருமிகு. மோகனசுந்தரம் என்பவர் என்னைப் பார்த்து, சக்கிலிய தேவிடியா மகளே உன்னை இன்னும் ஒரு வருடத்தில் பதவியை விட்டு விலக வைக்கிறேன் என்று கூறினார். அப்போது 1வது வார்டு உறுப்பினர் எங்கள் சமூகத்தைச் சேர்ந்த திரு. வடிவேல் மற்றும் 9வது வார்டு உறுப்பினர் திருமிகு. தமிழ்செல்வி ஆகியோர் அருகில் இருந்தனர்.

இந்நிலையில் கடந்த 1.1.2012 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் நான் பசுவபட்டி ஊராட்சி அலுவலகத்திற்கு இலவச வீடுகளின் உத்தரவுகளை வழங்க அங்கு சென்றேன். அப்போது அங்கு ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. மோகனசுந்தரம், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் திருமிகு. மணிமேகலை ஊராட்சி மன்ற முன்னாள் தலைவியின் கணவர் திரு. பெரியசாமி கவுண்டர் மற்றும் ஈஸ்வரமூர்த்தி (45) ஆகியோரின் தலைமையின் முதியோர் உதவித்தொகை பெற விண்ணப்பம் வழங்கிக் கொண்டிருந்தனர். இதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த நான், இதுகுறித்து விசாரித்தபோது, முதியோருக்கான விண்ணப்பங்கள் என்று கூறினார்கள். முதியோர் பென்சன் என்பது வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள வயதானவர்களுக்கு கொடுக்க வேண்டியதாகும். ஆனால், 10 ஏக்கருக்கு மேல் உள்ள அதுவும் மாதம் ரூ.30 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உள்ள நபர்களுக்கு இப்படிவத்தை வழங்கிக் கொண்டிருந்ததனால் அதற்கு நான் எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்துப் போடமாட்டேன் என்று கூறினேன். அப்போது ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. மோகனசுந்தரம் என்பவர், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவி திருமிகு. மணிமேகலை, திரு. பெரியசாமி கவுண்டர், திரு.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் என்னைப் பார்த்து, ஏண்டி சக்கிலிய தேவிடியா மகளே உன் கையெழுத்து இருந்தால் மட்டும்தான் விண்ணப்பம் தர வேண்டுமா? உன் கையெழுத்து தேவையில்லை என்று சாதி ரீதியாக இழிவாகப் பேசி, அவமானப்படுத்தினார்.

அப்போது மணிமேகலை என்பவர் என்னைப் பார்த்து, நீ ஏதேனும் செய்வதாக இருந்தால் மோகன சுந்தரத்தை கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் என்னை பணி செய்யவிடாமலும் ஊராட்சி மன்ற தலைவர் நாற்காலியில் அமர்வதற்கு எல்லாம் ஒரு தகுதி வேண்டும். அது உனக்கு இல்லடி சக்கிலிச்சி என்று, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவியின் கணவர் திரு. பெரியசாமி கவுண்டர் சாதி ரீதியாக இழிவாகப் பேசினார்.

இதுகுறித்து நான் கடந்த 13.1.2012 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சியருக்கும், 14.1.2012 அன்று தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்திற்கும் பசுவபட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. மோகனசுந்தரம், மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் திருமிகு. மணிமேகலை மற்றும் திரு. பெரியசாமி கவுண்டர் ஆகியோர் மீது புகார் கொடுத்தேன்.

இந்நிலையில் கடந்த 23.1.2012 அன்று மாவட்ட ஆட்சியரிடம், சாதி இந்துவான ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மோகனசுந்தரம் மற்றும் மணிமேகலை ஆகியோர் நான் அவர்களுக்கு இடையூறு செய்வதாக என் மீது பொய்யான புகார் அளித்துள்ளனர். தற்போது பசுவபட்டி ஊராட்சி எழுத்தர் சுகுணா என்பவரை மாற்றம் செய்துள்ளதால் எழுத்தர் இல்லாமல் ஊராட்சி பணிகள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 31.1.2012 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் சென்னிமலை நில வருவாய் அலுவலகத்தில் பெருந்துரை வட்டாட்சியர் மற்றும் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் இச்சம்பவம் குறித்து என்னிடம் விசாரணை மேற்கொண்டனர். அவ்விசாரணையில் நான், நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு பஞ்சாயத்து பணிகளை செய்வதற்கு தகுதியில்லை என்று சாதி இந்துக்களான பசுவபட்டி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் திரு. மோகனசுந்தரம் மற்றும் மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவி திருமிகு. மணிமேகலை ஆகியோர் என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசி வேலை செய்யவிடாமல் தடுத்தனர் என்று கூறினேன். அதன்பின்னர் அன்றிரவு சுமார் 8.00 மணியளவில் ஈரோடு மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பெண் காவலர் ஒருவர் வந்து என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரித்தார். ஆனால், இன்று வரை சாதி

இந்துக்களான திரு. மோகனசுந்தரம் மற்றும் திருமிகு. மணிமேகலை, திரு. பெரியசாமி ஆகியோர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஆகவே, கனம் சமூகம் அவர்கள் தாழ்த்தப்பட்ட இந்து அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவரான என்னை சாதி ரீதியாக இழிவாகப் பேசியும், பணி செய்யவிடாமல் இடையூறு செய்த சாதி இந்துவான திரு. மோகனசுந்தரம், திருமிகு. மணிமேகலை, திரு. பெரியசாமி ஆகியோர் மீது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10) & 3(2)(7) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்து, தக்க நடவடிக்கை எடுத்து, என்னுடைய பணியை தொடர்ந்து செய்வதற்கு சிறப்பு கவனம் செலுத்தி, பாதிக்கப்பட்ட எனக்கு தகுந்த நீதி, நிவாரணம் மற்றும் பாதுகாப்பு வழங்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நாள்: 2.2.2012
இடம்: வாய்க்கால்புதூர்

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள,
(வள்ளிதெய்வானை)

**ஆதாரம்: EVIDENCE**

# உள்ளாட்சி தேர்தல் முன் விரோதத்தால்

**ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்ட ஊராட்சி தலைவர்**

தூத்துக்குடி அருகே, உள்ளாட்சித் தேர்தல் முன்விரோதத்தில், ஊராட்சி தலைவர் அவருக்கு ஆதரவான, 50 குடும்பத்தாருடன், ஊரைவிட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளார். இதில், உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, அவர்கள் கலெக்டர் ஆஷிஷ்குமாரிடம் மனு அளித்தனர். தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டது. குமரெட்டியாபுரம் ஊராட்சி. கடந்தாண்டு அக்டோபரில், இந்த ஊராட்சி தலைவர் பதவிக்கு நடந்த தேர்தலில், கனகமணியும், அவரை எதிர்த்து தாமரைச் செல்வியும் போட்டியிட்டனர். இதில், கனகமணி 58 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, ஊராட்சி தலைவரானார். இதனால் அவருக்கும் எதிர்தரப்பிற்குமிடையே முன்விரோதம் ஏற்பட்டது.

**ஒதுக்கி வைப்பு**

இதனிடையே, கனகமணி கிராமத்தினருடன், தூத்துக்குடி கலெக்டர் அலுவலகம் வந்தார். ஊராட்சி தலைவர் தேர்தலில், தான் வெற்றி பெற்றதை ஏற்றுக் கொள்ளாத ஊர் நாட்டாண்மை வையணன், தங்களை எட்டு மாதமாக ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளதாக குற்றம்சாட்டி, கலெக்டர் ஆஷிஷ்குமாரிடம் மனு கொடுத்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது: தலைவராக வெற்றி பெற்ற நாளிலிருந்து இன்றுவரை என்னையும், என் குடும்பத்தையும், எனக்கு ஆதரவாக ஓட்டளித்த, 50 குடும்பத்தையும், வையணன் கிராமத்தைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளார். பொது மடத்தில் உட்கார அனுமதிப்பதில்லை.

**அவதூறாக பேசி மிரட்டல்**

திருமண வீடு, துக்க நிகழ்ச்சிக்கு சென்றால், அவர் அவதூறாக பேசி மிரட்டுகிறார். மே 22ல், நடக்கவுள்ள காளியம்மன் கோவில் ஊர்த் திருவிழாவை, எங்களையும் சேர்த்து நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பிரச்சனையில், தாங்கள்தான் மெஜாரிட்டி எனக்கூறி செயல்படும், வையணன் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதுகுறித்து விசாரித்து நடவடிக்கை எடுப்பதாக, கலெக்டர் உறுதியளித்ததாக பின்னர் கனகமணி கூறினார்.

**ஆதாரம்: தினகரன் (8.5.2012)**

# இந்தியாவின் வேலை உறுதி அளிப்புத் திட்டம் உண்மையிலே வேலைக்கு உத்திரவாதம் தருகின்றதா?

– பூஜா டட்டா, ரிங்கு முர்கை, மார்டின் ரவலியன், டாமினிக்யூ வான் டி வாலெ

**தேசிய மாதிரிப் புள்ளி விவரக் கணக்கெடுப்பு 2009–2010ன் புள்ளி விவரங்களை ஆய்வு செய்தபோது மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் மிகுந்த வறுமை நிறைந்த மாநிலங்களில் அதிக வேலை உரிமை கோரிக்கை தேவைப்படும் என்னும் எதிர்பார்ப்பு சரிதான் என்று உறுதிப்படுத்தியுள்ளது. இருந்த போதிலும் அனைத்து வேலை உரிமை கோரிக்கையை நிறைவேற்றுகின்ற அளவுக்கு வேலை வழங்கப்படவில்லை. இது எல்லா மாநிலங்களிலுமே இருந்தாலும் வறுமை மாநிலங்களில் இது மிக அதிகமாய் இருந்தது. ஆனால் இத்திட்டம் வறுமை மாநிலங்களில் தான் அதிகம் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இது இப்படி இருந்த போதிலும் இத்திட்டம் கிராம ஏழைகளை மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களைச் சென்று சேர்ந்திருக்கிறது. மேலும் ஏழைப் பெண்களை வேலையாட்களாக கவர்ந்திருக்கிறது.**

**முன்னுரை:**

2006ம் ஆண்டு இந்தியா கிராம வறுமையை ஒழிப்பதற்காக ஒரு முன் முயற்சியை எடுத்துக் கொண்டது. 2005ம் ஆண்டில் இயற்றப்பட்ட கிராம வேலை உறுதி அளிப்புச் சட்டம் வேலை செய்யும் உரிமையை நியாயமாக எல்லாக் குடும்பங்களுக்கும் பொதுவானதாக்கியது. தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத்திட்டம் மூலமாக பின்னர் இது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்டமாக பெயர் மாற்றம் பெற்றது. 2009ம் ஆண்டில் (MGNREGS) இத்திட்டம் எல்லா கிராமக் குடும்பங்களுக்கும் ஆண்டில் 100 நாட்கள் வேலை பெற வழி வகுத்தது. இதன் மூலம் வயது வந்த எவரும் உடலுழைப்பு செய்ய முன் வரும்பட்சத்தில் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச கூலி நிர்ணயத்தில் வேலை செய்ய உறுதி அளிக்கிறது. வேலை செய்ய மனு செய்த 15 நாட்களுக்குள் வேலை கொடுக்க முடியாவிடில் மாநில அரசு வேலையில்லாதோருக்கான உதவித் தொகையை வழங்கிட வேண்டும். கிராம சபைக் கூட்டங்களில் என்ன வேலை செய்யலாம் என்பதைக் கண்டறிய வேண்டும். திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதலில் கிராமசபை முக்கியப் பங்கு வகிக்கின்றது.

பல சிறப்பான வழிகளில் இத்திட்டம் வறுமையைக் குறைப்பதில் பங்காற்றுகின்றது. நேரிடை மற்றும் வெளிப்படையானதொரு வழி என்னவென்றால் கிராமப்புற ஏழை மக்களுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்பு மற்றும் பணவரவுக்கு இத்திட்டம் வழி ஏற்படுத்திக் கொடுக்கின்றது. இத்திட்டத்தை ஆதரித்து நீண்ட காலமாகச் சொல்லப்படும் விவாதம் என்னவென்றால் ‘‘சுய இலக்கு’’ நிர்ணயிக்க வழி உள்ளது என்பதுதான். அதாவது உடலுழைப்பு சார்ந்த இவ்வேலைகளுக்கு ஏழைகள் அல்லாதோர் முன்வரமாட்டார்கள் என்பதும் ஏழைகளுக்கும் வேறு பெரிய வாய்ப்புகிட்டும்போது அங்கு சென்றுவிடுவார்கள் என்பதும்தான்.

மேலும் வேலை நிர்ணயம் செய்யும் போதே சட்டப்படியான குறைந்தபட்சக் கூலியும் நிர்ணயிக்கப்பட்டுவிடுவதால் இது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடிகிறது எனலாம். இப்படிப்பட்ட ஒரு திட்டம் நடைமுறையில் இருக்கின்ற காரணத்தால் ஏழை பெண்கள் மற்றும் ஆண்கள் தங்களுக்குத் தகுந்த ஊதியத்தை ஏற்றிக் கொடுக்குமாறு போராடும் திறனை பயன்படுத்திக் கொள்ள முடிகிறது. அப்படி போராடியும் கூலி உயர்வு கிடைக்காதபட்சத்தில் விழுந்தால் தாங்கிப்பிடிக்கும் மெத்தையாகவும் இத்திட்டம் செயல்படுகிறது. இத்திட்டத்தை காட்டி பயன்பெற ஏதுவாகவும் இத்திட்டம் அமைகிறது. அவர்கள் இத்திட்டத்தில் பங்கு கொள்ளாதபோதும் கூட என்பது கவனிக்க வேண்டிய ஓர் அம்சமாகும்.

இப்படிப்பட்டதோர் திட்டம் இந்திய கிராமங்களிலுள்ள ஏழைகளுக்கு தினசரி வாழ்வில் பல இன்னல்களை எதிர்கொள்ள வைக்கும் காப்பீடு போலவும் செயல்படுகின்றது. இப்படிப்பட்ட வேலைகள் தேவைப்படாதவர்களும் கூட இத்திட்டத்தை அறிந்து, அதன் மூலம் பயன் பெறலாம். தொழிலாளர்கள் சந்தைப்படுத்தப் படுவதினின்றும் ஓர் பாதுகாப்பு மற்றும் லாபம் ஏழைகளுக்கு கிடைக்கிறது எனலாம்.

இத்திட்டம் கிராமப்புற இந்தியாவின் வறுமைக்கான சில காரணங்களை களைவதில் உதவுகின்றது. ‘‘கீழிருந்து மேல்’’ எனும் தேவை அடிப்படையிலான இயற்கை உந்துதலால் கிராமப்புற ஏழைமக்களை பலப்படுத்த உதவுகின்றது. அதன் மூலம் அவர்கள் வறுமையிலிருந்து தப்பிக்க முடிகிறது. வேலை தேவை என்பதை உரிமையுடன் கேட்பதன் மூலம் மட்டுமே சமூகத்தில் காலம் காலமாக உள்ளூர் மக்களால் புறந்தள்ளப்பட்டிருந்த ஏழை மக்கள் பலம் பெற்றுவிடுவார்கள் என்பது அறியாமையாகும் என்றாலும் கூட வேலை என்பது சட்டப்பூர்வ உரிமையாக்கப்பட்டுள்ளது என்பது முற்போக்கிற்கான முதல்படி என்பது நிச்சயமான ஒன்றுதான்.

‘‘வேலைக்கு உத்தரவாதம்’’ என்ற நோக்கம் முக்கியமானது என்னும் தெளிவு வேண்டும். இத்திட்டத்தின் முழு பயனையும் பெற வேண்டுமென்றால் இதன் பயன்கள் இத்திட்டத்தின் வேலை, அதன் தேவைக்கு ஏற்ப வேலை செய்பவர்கள் என்பதன் அடிப்படையில் தான் இருக்கிறது. இது அவ்வளவு எளிதானது அல்ல. பொது பணத்தை செலவழிக்குபோது என்னவகை அர்ப்பணிப்பு இருக்க வேண்டும் என்பது போல இக்கட்டான நேரங்களில் காப்பீடு பணத்தை அரசு வழங்குவதற்கு தயாராக வேண்டும்.

ஒரு திட்டத்திற்காக அதிகபட்சம் எவ்வளவு செலவினம் என்பது வரவு செலவு திட்டத்திற்காக என்று கணக்கிடுவது அவசியம் எனில் கூலிக்கான பணம் என்று ஒதுக்கீடு செய்வது தவிர்க்க முடியாததாகும். வேறு விதமாகக் கூறவேண்டுமானால் கூலி நிர்ணயம் என்பது வேலையாட்களின் எண்ணிக்கையை பொறுத்து வேலையின் திட்ட மதிப்பீட்டை பொறுத்து அமைய வேண்டும். இது சில சமயங்களில் சமூக மதிப்பீட்டின்படி மிகக் குறைவானதாகவும் அமைந்துவிடலாம்.

செலவினம் என்பது நெகிழ்வுடையதாக இருந்தது. வேலை செய்பவர்களின் எண்ணிக்கையை பொருத்து என்று வரும்போது கூலியை நிர்ணயிப்பது என்பது சவாலான ஒன்றுதான். அதிலும் ஏழ்மை விரவியுள்ள இடங்கள் என்று வரும்போது இன்னும் சிக்கலானதுதான். மாநிலக் குறைந்தபட்சக் கூலியைவிட கூலி குறைவாக நிர்ணயிக்க வரும்போது பூஜ்ய செலவு என்று சட்டம் எதையும் குறிப்பிடவில்லை. பெரும்பான்மை பகுதியை மத்திய அரசு செலவழிக்கிறது. எப்படி இருந்த போதிலும் திட்டங்களை செயல்படுத்தும்போது தொழில்நுட்ப வேலையாட்களை பணிக்கு அமர்த்த வேண்டிதான் இருக்கிறது. இந்த சுமை ஏழ்மை மிகுந்த இடங்களில் அதிகமாக இருந்துவிடலாம். அது காரணமாக இத்திட்டத்தை செயல்படுத்துவது கடினமாகிவிடுவதுண்டு.

இந்த கட்டுரை எந்த அளவுக்கு பணிகளை பல மாநிலங்களில் செய்ய முடிகின்றது என்பதை ஆய்வு செய்கின்றது. இந்தியா முழுவதுமுள்ள குடும்ப விவரம் பற்றிய புள்ளி விவரத்தை தேசிய மாதிரிக்கணக் கெடுப்பிலிருந்து (2009–10) எடுத்து பயன்படுத்திக் கொண்டோம்.

## வேலைக்கு ஆட்கள் என்னும் தேவையின் அடிப்படையில் மாநிலங்களில் எப்படி உள்ளது:

இத்திட்டத்தின் பங்கேற்பு விகிதம் (P) என்பது எத்தனை குடும்பங்களில் இருந்து இத்திட்டத்தில் வேலை பெறுகிறார்கள் என்பதை பொறுத்தது. இதிலிருந்து வேலைக்கு தேவையான நபர்கள் என்பதை கணக்கிடலாம் (D). இதிலிருந்து ஒன்றை கழித்து அதாவது வேலை செய்ய தயாராய் இருந்தும் வேலை கிடைக்காதவர்கள். இவ்வாறாக ஒரு மாநிலத்துக்கானதை நாம் அடையாளம் காணலாம்(i)

$$P_i + (1-R_i)\, D_i$$

இதில் குடும்ப பங்கேற்பு பங்கீடான நிலை மற்றும் தேவை என்பதை கவனிக்க வேண்டும்.

இந்த ஆய்வில் வேலைப் பங்கேற்பு மற்றும் வேலை பங்கீடு என்பதோடு எங்கள் விளக்கத்தை நிறுத்திக் கொண்டோம். அதாவது குடும்பங்களுக்கு வேலை கிடைத்தது அல்லது கிடைக்காதது என்பதோடு நிறுத்திக் கொண்டோம் வேலைக்கு தயாரான பல குடும்பங்களில் சட்டத்தில் சொன்ன 100 நாட்களும் வேலை கிடைக்காமல் போயிருக்கலாம். இவைகளை நாங்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை. எங்களுக்கு வேறு வழி இல்லை. ஏனெனில், நாங்கள் பயன்படுத்திய தேசிய மாதிரி கணக்கெடுப்பில் (NSS) குடும்பங்களில் எத்தனை நாள் வேலை வாய்ப்பு வேண்டும் என கேட்ட புள்ளிவிவரம் இல்லை. எங்களுக்கு கிடைத்ததெல்லாம் அதிக வேலை வேண்டுமென குடும்பங்கள் விரும்பியதாக மட்டும்தான்.

ஏற்கெனவே கூறியது போல ஊரக வேலை உறுதி அளிப்பு திட்டம் உருவாக்கத் திட்டத்தின்படியே செயலாற்றவும் நடைமுறையில் முடியும் என்றால் ஆட்களுக்கு தேவைப்படும் வேலை என்பது சரியானதாகிப் போகும். ஆனால், இந்த நிலைமை அவ்வளவு எளிதாக எட்டக் கூடிய விஷயமல்ல. நடைமுறையில் இத்திட்டத்தை செயல்படுத்தும்போது பல சிக்கல்கள் தோன்ற வாய்ப்புண்டு. உதாரணமாக வேலை செய்ய விருப்பம்

இருப்பவர்களுக்கு சரியான சமயத்தில் வேலை கிடைக்காமல் போய்விடலாம் வேலைப் பங்கீடு முறையும்கூட ஆட்களின் தேவையை எவ்வளவு விரைவில் பூர்த்தி செய்ய முடியும் என்பதை பொறுத்து சிறப்பானதாக இருக்கும்.

வேலைக்கான உண்மைத் தேவை என்பதை எவ்வாறு நாம் கணக்கிட்டு வேலைப் பங்கீடை செய்ய முடியும் அரசு நிர்வாகத்தினர் கொடுக்கும் புள்ளி விவரம் என்னவென்றால் வேலைக்கான தேவை என்பது இல்லை என்றுதான் . நாங்கள் இந்த ஆய்வுக்குப் பயன்படுத்திய புள்ளி விவரங்கள் அதாவது நிர்வாகத்தினர் கொடுத்தபடி 520.865 லட்சம் குடும்பங்கள் இந்தியா முழுவதும் வேலை கேட்டு 2009–2010ல் விண்ணப்பித்தனர். இவர்களில் 520.53 லட்சம் நபர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டுவிட்டது. ஆனால், இது சரியானதாக இருக்க முடியாது "வேலை தேவை" என்னும் நிர்வாகக் கணக்கு உண்மையான தேவையாய் இருக்க முடியாது. பல ஆய்வுகளில் கண்டறிந்தபடி வேலை விண்ணப்ப நிகழ்வறிக்கை மற்றும் அதன் அமைப்புப் பணிகள் மற்றும் பிரிவுகள் அவ்வளவு துல்லியமானதாக இல்லை. (உதாரணம் கேரா 2011 காண்க)

மேலும் மாநில மற்றும் உள்ளூர் அரசாங்கங்கள் வேலை தேவை என்பதை தம் அறிக்கைகளில் வெளிப்படுத்திக் கொள்வதில்லை. ஏனென்றால் அப்படி வெளிப்படுத்தினால் வேலையில்லாதோர்க்கு மான்யம் கொடுக்க வேண்டும் என்பதற்காக அத்தோடு சிலருக்கு "வேலை அட்டை" கொடுக்கப்படுவதினின்று நிறுத்தி வைக்கப்படுவதில்லை. அவர்களுக்கு அது அவர்களின் உரிமை என்பது கூடத் தெரிவதில்லை.

எவ்வளவு வேலை எத்தனைப் பேருக்குத் தேவை என்பதை சரியாகக் கணக்கிட வேண்டும் என்றால் மக்களை நேரடியாக ஆனால் தனிமையில் அவர்கள் வீட்டில் சந்தித்து திட்டத்தை தொடர்புபடுத்தாமல் கேட்டறிதல்தான் நல்ல முறையாகும். தேசிய மாதிரி புள்ளி விவரக் கணக்கெடுப்பு (2009–10) அதாவது 6வது சுற்று மூலம் கிடைத்த தகவல்கள்தான் இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகிறது. அதில் கேட்கப்பட்ட கேள்விகளான மக்களின் பங்கேற்பு வேலைக்கான தேவை, போன்றவற்றிற்கான பதில்கள்தான் பல மாநிலங்களிடையே அவற்றின் நிலைமையைப் பற்றி பகுத்தரிய முடிந்தது. மாநிலங்களிலும் ஜூலை 2009 முதல் ஜூன் 2010 வரை புள்ளி விவர சேகரிப்பு நடந்தது வேலைவாய்ப்பு வேலை வாய்ப்பின்மை பற்றிய கேள்வி எண் 10ல் மூன்று இணை கேள்விகள் கேட்கப்பட்டன. (i) குடும்பத்துக்கு "வேலை அட்டை" இருக்கிறதா (ii) இந்த அட்டை மூலம் கடந்த 365 நாட்களில் (கடந்த ஆண்டில்) வேலை கிடைத்ததா என்ற கேள்விகளுக்கு மூன்று வித பதில்கள் கோடிட்டு காட்டப்பட்டிருந்தது.

அவையாவன: வேலை கிடைத்தது, வேலை கேட்கப்பட்டும் வேலை கிடைக்கவில்லை, இத்திட்டத்தில் வேலை தேடவில்லை (iii) அக்குடும்பத்திற்கு வேலை கிடைத்திருந்தால் எத்தனை நாட்களுக்கு வேலை கிடைத்தது எவ்விதமாக கூலிப் பட்டுவாடா செய்யப்பட்டது. மேலும் கிராம ஒன்றிய அளவில் கேள்வி எண் 10ன் படி புள்ளிவிவரச் சேகரிப்புக்கு முந்தைய வாரத்தில் வேலைகள் பற்றிய தினசரி நிலவரம் பற்றியும் பொது வேலை பெற்ற நாட்கள் கூலி பெற்ற விவரம் பதிலளிக்கக் கேட்கப்பட்டிருந்தது.

கீழ்க்கண்ட அட்டவணை மாநில வாரியாகப் பங்கெடுப்பு விவரம், வேலை அளவு, வேலை பங்கீடு அளவு போன்றவற்றை காட்டுகின்றது. (மேலும் பெண்களின் வேலையையும் சுட்டிக்காட்டுகின்றது. அதுபற்றி பின்னர் விவாதிப்போம்) "உரிமைக் கோரிக்கை" அதாவது Demand என்பது பற்றி திட்டத்தில் வேலை கிடைப்பது, வேலை சேகரிப்பு வேலை கிடைக்காதது என்பதாக விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தது. இந்தியா முழுவதிலுமாக 45% கிராமக் குடும்பங்கள் வேலை வேண்டியுள்ளார்கள். இதில் வேலை கிடைத்த 56 சதவீதத்தினரில் வேலை பங்கீட்டு நிலை 44 சதவீதமாகும். பங்கீட்டு நிலவரம் ராஜஸ்தானில் 15 சதவீதமும் பஞ்சாப் 84 சதவீதமும் ஆகும். இந்தியாவில் மூன்று மாநிலங்களில்தான் பங்கீட்டு நிலை 20 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தது. மொத்தத்தில் வேலைக்கான "உரிமைக் கோரிக்கை" மிக அதிகமாகத்தான் இருந்தது.
மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய ஒரு விஷயம் உள்ளது. அது என்னவென்றால் பங்கெடுப்பு விகிதமும் கிராம வறுமை விகிதமும் மிகக் குறைந்த அளவில் தான் ஒத்துப் போகின்றது. இத்திட்டம் உருவான அடிப்படையில் உண்மையில் நடைமுறைப்படுத்த முடிகிறதென்றால் வறுமைமிகுந்த பகுதிகளில் தான் பங்கெடுப்பு விகிதம் அதிகமாக இருக்க வேண்டும். அதே போல பொதுச் செலவு என்பதிலும் இதே விகிதாச்சார முரண்பாட்டைக் காண முடிகிறது. இதுவும் கவனிக்க வேண்டிய ஓர் அம்சமாகும்.

### மாநிலங்களுக்கிடையிலான பங்கேற்பு விதத்தில் காணும் மாறுபாடுகள் பற்றிய ஓர் விளக்கம்:

வறுமை மிகுந்த மாநிலங்களில் இத்திட்டம் மிகவும் பயன்பாட்டில் இல்லாததற்கான காரணங்களை ஆய்வு செய்தபோது இரண்டு எதிர்மறையான விளைவுகள் பங்கேற்பை பாதிக்கின்றன என்று கண்டோம். முதலாவது இத்திட்டத்தின் வேலை உரிமைக் கோரிக்கை" "வறுமை

அட்டவணை

புள்ளி விவரம் – ஒட்டுமொத்தக் கணக்கெடுப்பு 2009–10

| | வறுமைக் கோட்டுக்கு கீழ் % தலைக்களுக்கு | பங்கெடுப்பு விகிதம் கிராம குடும்ப வேலை MNREGA | வேலை கோரிக்கை கிராமக் குடும்ப வாரியாக | பங்கீடு அளவு வேலை கோரி கிடைக்காத குடும்பங்கள் | பெண்களின் வேலைகளுக்கு மொத்தம் மனித தினத்தில் % |
|---|---|---|---|---|---|
| ஆந்திரபிரதேசம் | 20.64 | 0.354 | 0.472 | 0.249 | 58.1 |
| அஸ்ஸாம் | 42.28 | 0.182 | 0.413 | 0.559 | 27.7 |
| பீகார் | 56.47 | 0.099 | 0.461 | 0.785 | 30.0 |
| சட்டீஸ்கர் | 56.39 | 0.479 | 0.690 | 0.306 | 49.2 |
| குஜராத் | 32.54 | 0.215 | 0.382 | 0.438 | 47.5 |
| ஹரியானா | 24.18 | 0.051 | 0.195 | 0.738 | 35.6 |
| இமாச்சல் பிரதேசம் | 11.90 | 0.334 | 0.418 | 0.202 | 46.0 |
| ஜம்முகேஷ்மீர் | na | 0.097 | 0.334 | 0.709 | 7.0 |
| ஜார்க்கண்ட் | 43.50 | 0.192 | 0.517 | 0.628 | 34.3 |
| கர்நாடகா | 31.54 | 0.080 | 0.228 | 0.648 | 36.8 |
| கேரளா | 11.74 | 0.112 | 0.232 | 0.517 | 88.2 |
| மத்தியப்பிரதேசம் | 45.85 | 0.406 | 0.646 | 0.371 | 44.3 |
| மகாராஷ்ட்டிரா | 33.90 | 0.044 | 0.277 | 0.840 | 39.8 |
| ஒடிசா | 49.93 | 0.220 | 0.507 | 0.567 | 36.3 |
| பஞ்சாப் | 19.44 | 0.052 | 0.312 | 0.833 | 26.0 |
| ராஜஸ்தான் | 31.2 | 0.618 | 0.732 | 0.155 | 66.9 |
| தமிழ்நாடு | 22.81 | 0.335 | 0.414 | 0.190 | 82.9 |
| உத்திரபிரதேசம் | 40.75 | 0.162 | 0.350 | 0.536 | 21.7 |
| உத்தர்காந்த் | na | 0.292 | 0.406 | 0.280 | 40.1 |
| மேற்குவங்கம் | 35.05 | 0.432 | 0.658 | 0.344 | 33.4 |
| அனைத்து இந்தியா | 36.43 | 0.249 | 0.447 | 0.444 | 48.1 |

நிறைந்த மாநிலங்களில் அதிக வறுமையில் பாதிப்பை உண்டு பண்ணும். வறுமை நிறைந்த மாநிலத்தில் .591 (மாநில தவறு 0.192) உள்ளபோது அதாவது 6 சதவீதம் வேலை உரிமைக் கோரிக்கை 10 சதவீதம் வறுமைப் பெருக்கத்தை காண முடிகிறது.

இரண்டாவது எதிர்மறை விளைவு என்னவென்றால் வறுமை மிகுந்த மாநிலங்களில் வேலை உரிமைக் கோரிக்கை சரிவர நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. இதற்கு நாங்கள் மூன்று காரணங்களை முன் வைக்கிறோம். ஏழ்மையான மாநிலங்களில் மாநில அரசு மற்றும் உள்ளூர் அரசாங்கங்களின் பங்குத் தொகையான செலவினங்களை சந்திக்க முடிவதில்லை. இரண்டாவது காரணம் ஏழ்மை மாநிலங்கள் இத்திட்டத்தை நிர்வகிக்கின்ற திறமைக் குறைவுடையதாய் இருக்கின்றது. மூன்றாவதாக ஏழ்மை மாநிலங்களில் ஏழைகள் மிகவும் பலவீனர்களாக இருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் ஏழ்மை மக்கள் ஏழ்மையல்லாதோர் இருவருக்குமே வேலைக்கான தேவை இருக்கிறதென்றாலும் ஏழைகளுக்கு அதிகத் தேவை உள்ளது. ஏழைகளுக்கு உள்ளூரில் உள்ள முடிவெடுக்கும் விஷயங்களில் அதிகாரம் குறைவாயிருக்கும்போது (வேலைக் கோரிக்கை தம் உரிமை என்பது பற்றி விழிப்புணர்வின்மை காரணமாக) அதிக ஏழ்மையில்

உள்ள மாநில அரசுகள் இத்திட்டத்தில் அதிக வேலை உரிமைக் கோரிக்கை மனுவை ஏற்றுக் கொள்வதில் சிரமம் கொள்கின்றன.

மாநில பங்கேற்பு என்பது வேலை கோரிக்கை மற்றும் ஒவ்வொரு நபரின் வறுமை நிலைமை இரண்டையும் பாதிக்கவே செய்கின்றது. சரிவுக்கான காரணங்களை சாதாரணமாக விவரிப்பதில் சில அபாயங்கள் உண்டு. வேலைக் கோரிக்கை என்பது திட்டத்தில் உள்ள வேலைத் தேவையைவிட மிகையானதாக இருக்கக்கூடும். நுட்ப வேலை என்பது தேவைப்படும் பட்சத்தில் வேலை தேவையை தூண்டிவிட வாய்ப்புண்டு. அதே சமயத்தில் குறைந்த நுட்பவேலை அல்லது சாதாரண வேலை தேவைகள் வேலைத் திறமையை குறைத்துவிடலாம். எனவே நல்ல வேலை ஆட்களின் வேலை செய்யும் ஆர்வம் குறைந்துவிடலாம்.

MGNREGS திட்டத்தில் வேலைக் கோரிக்கை என்பது உண்மையில் நடைமுறையில் வேலையை உருவாக்கித்தரும் அளவிடுதலில் நேரும் தவறுகள் தேவைக்கும் வேலைக்கும் இடையில் தவறான ஒப்பீடுகளை உருவாக்கும். இத்திட்டம் மூலம் வறுமையைக் குறைக்க முடியுமா என்று பலர் கேட்கலாம். மக்களின் நல்ல பங்கேற்பு மூலம் வறுமையைக் குறைப்பதற்கான நம்பிக்கை வாய்க்கும்.

(மாறுபடும் புள்ளிவிவரங்கள் பங்கேற்பு நிலை, திட்டத்தில் வேலை செய்ததை குறிக்கும். வேலைக் கோரிக்கைதான் திட்டத்தில் வேலை கேட்டவர்கள் பற்றியது. தனி நபர் – வறுமைக் குறியீடு வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளவர்களைக் குறிக்கும்) ஆதாரம்: கட்டுரையாளர்களின் ஆய்வு முடிவுகள் தேசிய மாதிரிப் புள்ளி விவரச் சேகரிப்பின் தகவல்களை ஆய்வு செய்ததில் வெளியிட்ட முடிவுகள்)

மிக அதிகமான வறுமையைக் காட்டும் புள்ளி விவரத்தின் இரண்டு முடிவுகளும் காட்டுவது: பங்கேற்பு நிலை அதிகமாகும்போது வறுமைக் குறைவு ஏற்பட வேண்டும். ஆனால் இங்கோ, வறுமை மிகுதியான இடங்களில் பங்கேற்பு குறைகிறது. அதிக வறுமையில் அதிக வேலை உரிமைக் கோரிக்கை வரவேண்டும். வறுமைக் கோடு அதிகமாகும் இடத்தில் அதாவது 10 சதவீத அதிகரிப்பு 6.6 சதவீத பங்கெடுப்பைதான் அதிகமாக்கி உள்ளது. கோரிக்கை உரிமையை தவிர்த்து கணக்கீட்டுப் பார்க்கும்போது 5.0 சதவீதம் பங்கேற்பு குறைவு காணப்படுகிறது. இப்படி எதிர்மறை விளைவுகள் வந்துள்ளதின் காரணமாக பல மாநிலங்களிலும் ஓரளவே நேர்மறை முன்னேற்றத்தை பங்கெடுப்பு மற்றும் உரிமைக் குறைவு என்பதைக்காண முடிகிறது.

**அட்டவணை:**

**பல மாநிலங்களில் பங்கேற்புதனில் வரும் பின்னடைவு பற்றிய விவரம்**

| | சாதாரன குறைவு | காரியம் நிறைவேற மாறுபடும் செலவுத்தொகை |
|---|---|---|
| நிலையானது | –0.074 (–1.639) | –0.064 (–1.197) |
| வேலை உரிமைக் கோரிக்கை | 1.109 | |
| | 13.798 | 1.778 |
| | | 9.880 |
| தனிநபர் வறுமைக் குறியீடு | 0.501 | –0.619 |
| | –(4.922) | (–4.581) |
| $R^2$ | 0.902 | 0.894 |
| SEE | 0.056 | 0.058 |
| N | 18 | 18 |

இதை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் இத்திட்டத்தை செயல்படுத்திய வறுமை மாநிலம் ஒன்றை உற்று நோக்கும்போது தெளிவாகும். ஊதாரணமாக, பீகாரைக் கொண்டு பார்ப்போம். எண்ணிக்கை மற்றும் தகுதி இவற்றின் அடிப்படையிலும் எங்களுடைய சிறப்பு கணக்கெடுப்பு ஆய்வின் அடிப்படையிலும் பார்க்கும்போது குறைந்த திறன் வெளிப்படும். ஏழைகளை குறைந்த அளவில் பலப்படுத்துவதுமான இரண்டு விளைவுகள்தான் பீகாரில் இத்திட்டத்தின் வெளிப்பாடாகக் காணமுடிகிறது.

மேலும் குறிப்பாக நாங்கள் கூற விரும்புவதென்னவென்றால் ஒரு நிலைமையை மாற்றுவதன் மூலமாக மட்டும் இந்தியாவில் நாம் விரும்பிய மாற்றத்தைக் கொண்டு வரமுடியாது. இரண்டு முனைகளிலும் சிறப்பாகப் பணியாற்றி மாற்றத்தைக் கொண்டு வருவது மிக அவசியமாகும்.

சமூகக் குழுக்கான (ஜாதி மற்றும் மலைவாழ் மக்கள்) இவர்களை இலக்கு மக்களாவது வேறு ஒரு முக்கியமான அம்சமாகும். அட்டவணை ஜாதியினர் மற்றும் மலைவாழ் மக்கள் மற்றும் பெண்கள் போன்றவர்கள் காலங்காலமாக ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். எனினும் இவர்கள்

இத்திட்டத்தினால் சரியான முறையில் பயன் அடையவில்லை என்று நல்ல பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இங்கு நாங்கள் பெண்களை பற்றியும் விவாதிக்க விரும்புகிறோம்.

கீழ்க்காணும் அட்டவணை தேசிய அளவிலான குழுக்களின் பங்கேற்பை பற்றிக் கூறும். 42 சதவீதம் கிராம மலைவாழ் அட்டவணை சாதியினரும் 34 சதவீதம் அட்டவணை சாதியினரும் பங்கேற்றுள்ளனர். 21 சதவீதத்தினர் பிற பிற்பட்ட சாதியனரும் பிற சாதியினர் 16 சதவீதத்திலும் பங்கேற்றுள்ளனர். ஆனால், இவர்களிடையே பெரிய வித்தியாசம் தென்படுகிறது. மலைவாழ் மக்களின் பங்கெடுப்பைப் பொறுத்தவரை 6 சதவீதம் மகாராஷ்டிர மாநிலத்திலும் 82 சதவீதம் ராஜஸ்தானிலும் காணப்படுகிறது.

இம்மாநிலங்களிலே அட்டவணை சாதியினர் முறையே 2 சதவீதம் முதல் 65 சதவீதம் வரை காணமுடிகிறது. மொத்தப் பங்களிப்பு கூடும்போது அட்டவணை மலைவாழ் மக்கள் மற்றும் அட்டவணை சாதியினர் பின் தங்கிய பிற சாதியினரில் பங்களிப்பும் கூறுகின்றது. திட்ட விரிவாக்கத்தின் மூலம் இவர்களின் இக்குறிப்பிட்ட மக்களின் முன்னேற்றம் காண முடியும்.

**முடிவுகள்:**

அறிமுகமானதிலிருந்தே மகாத்மா காந்தி வேலை உறுதி அளிப்புத் திட்டத்தை பற்றி பெருத்த அளவில் பொது விவாதம் இருந்து வருகின்றது. ஊடகங்களில் இது பற்றிய அறிக்கைகளும் குறிப்பிட்டுச் சொல்லும்படி சில புள்ளிவிவர ஆய்வுகளும் சில மாநிலங்களை பற்றியும் சில மாவட்டங்கள் பற்றியும் ஆய்வு கட்டுரை மற்றும் ஆய்வுகள். வந்த வண்ணம் உள்ளன. இந்த ஆய்வுக் கட்டுரையில் தேசிய மாதிரிப் புள்ளி விவரக் கணக்கெடுப்பு 2009–2010ஐ அடிப்படையாக வைத்து அவற்றில் கூறப்பட்ட முடிவுகளை சோதித்தறிய முற்பட்டோம். நாங்கள் ஒரு சில முக்கிய இலக்குகளை முன் வைத்து ஆய்வு செய்தோம். அது என்னவென்றால் வேலை கோரிக்கை உரிமை பற்றியதும் வேலைக்கான ஊதியம் பற்றியதுமாகும்.

வறுமை மாநிலங்களில் வேலைக்கான கோரிக்கை மனுக்கள் அதிகமாய் இருந்தது என்பதை

**அட்டவணை:**
**ஜாதி இலக்கு மற்றும் பங்கேற்பு நிலை:**

| | மலைவாழ் மக்கள் | அட்டவணை ஜாதியினர் | பிறபிற்பட்ட வகுப்பினர் | SC, ST பிற OBC Mean | பிறர் | இலக்கு மக்கள் |
|---|---|---|---|---|---|---|
| ஆந்திரபிரதேசம் | 0.567 | 0.434 | 0.382 | 0.412 | 0.150 | 0.262 |
| அஸ்ஸாம் | 0.192 | 0.179 | 0.163 | 0.174 | 0.191 | -0.017 |
| பீகார் | (0.087) | 0.185 | 0.089 | 0.116 | 0.016 | 0.100 |
| சட்டீஸ்கர் | 0.519 | 0.435 | 0.504 | 0.500 | 0.214 | 0.286 |
| குஜராத் | 0.340 | 0.289 | 0.180 | 0.252 | 0.070 | 0.181 |
| ஹரியானா | (0.000) | 0.105 | 0.044 | 0.071 | 0.018 | 0.054 |
| இமாச்சல் பிரதேசம் | 0.392 | 0.413 | 0.294 | 0.376 | 0.298 | 0.077 |
| ஜம்முகேஷ்மீர் | (0.054) | 0.134 | 0.109 | 0.114 | 0.090 | 0.024 |
| ஜார்க்கண்ட் | 0.204 | 0.268 | 0.155 | 0.197 | 0.149 | 0.048 |
| கர்நாடகா | 0.186 | 0.160 | 0.042 | 0.089 | 0.054 | 0.035 |
| கேரளா | (0.168) | 0.238 | 0.098 | 0.123 | 0.088 | 0.035 |
| மத்தியப்பிரதேசம் | 0.567 | 0.442 | 0.334 | 0.433 | 0.211 | 0.222 |
| மகாராஷ்ரா | 0.063 | 0.017 | 0.074 | 0.058 | 0.015 | 0.044 |
| ஒடிசா | 0.323 | 0.220 | 0.224 | 0.253 | 0.100 | 0.153 |
| பஞ்சாப் | (0.000) | 0.104 | 0.016 | 0.082 | 0.009 | 0.074 |
| ராஜஸ்தான் | 0.816 | 0.654 | 0.581 | 0.644 | 0.444 | 0.200 |
| தமிழ்நாடு | (0.286) | 0.523 | 0.279 | 0.338 | 0.069 | 0.269 |
| உத்திரப்பிரதேசம் | (0.140) | 0.325 | 0.118 | 0.191 | 0.044 | 0.146 |
| உத்தர்காந்த் | 0.388 | 0.513 | 0.082 | 0.321 | 0.278 | 0.043 |
| மேற்குவங்கம் | 0.656 | 0.507 | 0.449 | 0.521 | 0.362 | 0.159 |
| அனைத்து இந்தியா | 0.415 | 0.336 | 0.214 | 0.279 | 0.155 | 0.124 |

உறுதிப்படுத்துகிறோம். இதன் மூலம் ஏழ்மையில்லாத மக்களை இத்திட்டம் கவரவில்லை.

இருந்தபோதிலும் இத்திட்டத்தில் பங்கேற்பு என்பது ஏழ்மை மாநிலங்களில் அப்படி ஒன்றும் அதிகமாக இருந்திடவில்லை. இந்த முரண்பாட்டிற்கான காரணங்களில் முக்கியமானது வேலை உத்தரவாதம் என்பது பெரிதாக எடுத்துக்கொள்ளப் படாததும் அதுபற்றிய விழிப்புணர்வுக் குறைந்தன இந்தக் கட்டுரையின் தலைப்பில் நாங்கள் கேட்டுள்ள கேள்விக்கு நாங்கள் தரும் பதில் "இல்லை" என்பதுதான். பங்கீடு என்பது பொதுவானதாகத்தான் இருந்தது மற்றும் ஏழ்மை மாநிலங்களில் அந்த விகிதம் கொஞ்சம் அதிகம் அவ்வளவுதான்.

உள்ளூர் அளவில் நிகழ்வுப் போக்கை கவனித்தால் ஒரே சீராக இல்லாத கோணலாகத்தான் தோன்றும். அதிலும் ஏழைகளின் பக்கம் சாய்வு தெரிகிறது. மாற்றம் என்பது ஒரு சில இடங்களில் தெரியத்தான் தெரிகிறது என்பதற்கு சாட்சியங்கள் உள்ளன. ஆனாலும் அதை வைத்துப் பொதுமைப்படுத்திவிட முடியாது என்பதைக் கவனித்தல் வேண்டும். ஏழைகள் ஓரளவுக்குப் பயன் அடைந்திருக்கிறார்கள். எனினும் அது மிகக் குறைந்த அளவேயாகும். இத்தனை குறைபாடுகள் இருந்தாலும் ஏழைமக்களையும் மலைவாழ் மக்கள் மற்றும் பின்தங்கிய மக்களை சென்று சேர்ந்திருக்கிறது என்பது நன்றாகத் தெரிகின்றது.

மற்றவர்களைவிட ஏழைமக்களின் பங்கெடுப்பு விகிதம் என்பது அதிகமாகத்தான் உள்ளது. அலுவலகக் குறியீடு இதனை சுட்டிக்காட்டுகிறது. அலுவலக குறியீடு இல்லாமலும் பல குடும்பங்களை இது தொட்டு செல்கிறது. மிகுந்த நுகர்வுடையவர்களை பார்த்தால் இதில் பின்னடைவு தெரிகின்றன. இதை வைத்து நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட முடியாது. ஒட்டுமொத்த கணிப்பில் இதனை ஒதுக்கிவிடவும் முடியாது.

மாநிலங்களிடையே இலக்கு மக்களை பொறுத்தவரை வேறுபாடு காணப்படுகிறது. ஒட்டுமொத்த மக்கள் பங்களிப்பு என்பது முக்கியமாகக் காண வேண்டிய ஒன்று. பல ஏழை மக்கள் இதில் பங்கேற்காமலேயே விடுபட்டிருக்கின்றனர். இதுபற்றி அறியாமல் இருப்பதுவே காரணமாகும்.

ஏழைகளுக்கு பங்கீடு முறையில் வங்கம் இல்லை என்றாலும் பல மாநில இடங்களில் (இமாலயம் மற்றும் தமிழ்நாடு தவிர்த்து இங்கு வேலை கேட்டவர்களுக்கெல்லாம் கிடைத்திருக்கிறது. எல்லோருக்கும் சம பங்கீடு வேலை கிடைக்கவில்லை. பங்கீட்டு முறையினால் ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய எல்லாமும் கிடைத்தது என கூறிவிட முடியாது. அதிலும் குறிப்பாக பலமுள்ளவர்களாக்குவது மற்றும் காப்பீடு போன்றவற்றில் பயனடையவில்லை. அந்த வரிசையில் மிக முக்கியமானது வேலை கோரிக்கை நிறைவேற்றாததுதான்.

பெண்களிடையே இத்திட்டம் பிரபலமாகி இருந்தாலும் வேலை சந்தையில் அந்த அளவு பயனடைந்திருக்கவில்லை. ஏனெனில், பங்கீட்டு முறை சரியில்லாததால் ஆண் பெண் கூலி வேறுபாடு இல்லை. ஏழை குடும்பங்களில் ஆணோ பெண்ணோ அதிக கூலியை நாடிச் செல்கின்றனர்.

ஒருசிலர் இத்திட்டத்தின் காரணமாக வேறு பணித்தளங்களிலும் உதாரணமாக விவசாயத்தில் கூலி உயர்வு கிடைத்திருப்பதாக கூறுவர். இதை சிலர் நல்லமாற்றமாக கருதுகின்றனர். சிலர் அப்படி இல்லை என்கின்றனர். இந்தியா முழுவதிலும் சாதாரண தினக்கூலி உயர்வை 2009–2010ல் காணமுடிகிறது. வேலை கூலி உயர்வுக்கு ஓர் சதவிகிதமாக நாம் இதை எடுத்துக் கொண்டாலும் பங்கீடு முறை சரியில்லை. எதிர்மறை ஒப்பீடு ஒன்றை நாம் காணலாம். வேலை சந்தை மற்றும் கூலி நிர்ணயித்தில்தான் அது தெரிகிறது. இது ஓர் அனுமானம் தான் என்றாலும் பிற பொருளாதார பிரச்சனைகளும் பின்னியுள்ளன. வறுமை நிலையை நாம் மாற்றும்போது மற்ற காரணிகளும் தானாக மறைந்துபோகும். ஏழ்மை மாநிலங்கள் வேலையை இன்னும் சரியாக பங்கீடு செய்யும்போது வேலைக் கோரிக்கையை ஓரளவுக்குச் சரியாக ஈடுகட்ட முடியும். ஏனெனில் அந்த அளவுக்கு நில உடைமை என்பது கிராமங்களில் குறைந்துபோய் இருப்பதால் வேலை உரிமைக் கோரிக்கை மிகும் என்பதுமாகும்.

ஆதாரம்: Economic & Political weekly April 21, 2012 – Vol No. 16

*We Would like to thank Maria Mini Jos for her very able research assistance. These are the views of the authors and do not necessarily represent those of the World Bank or of any of its member countries. The authors are grateful to Emanuela Galasso, Pablo Gottret, Ghazala Mansuri and Giovanna Prennushi for comments. A fuller discussion of a number of issues raised in this paper can be found in Dutta et al (2012a.)*

*Puja Dutta (pdutta@worldbank.org), Rinku Murgai (Rmurgai@worldbank.org), Martin Ravallion (Mravallion@worldbank.org) and Dominique van de Walle (dvandewalle@worldbank.org) ar with the World Bank.*

# ஆற்றைக் கடந்து செல்லும்

– மே.தே.

திருவள்ளூரை அடுத்த பூண்டி ஒன்றியம், எல்லப்ப நாயுடு பேட்டை ஊராட்சிக்குட்பட்ட அருந்ததியர், ஆதிதிராவிடர் காலனியில் 50 குடும்பங்களுக்கும் மேல் வசித்து வருகின்றனர். சுடுகாட்டிற்குச் செல்ல பாதை இல்லாததால் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இறந்தவர்களின் உடல்களைக் குசஸ்தலை ஆற்றின் வழியாக 15 அடி ஆழத் தண்ணீரில் நீந்தி, கடந்து சுமந்து செல்கின்றனர்.

இவ்வூரைச் சேர்ந்த எ. கோவிந்தன் நம்மிடம்: தெலுங்கு பேசும் அருந்ததிய மக்களும், ஆதிதிராவிடர்களும் இந்தப் பகுதியில் வசிக்கின்றோம். எங்கள் ஊரைச் சுற்றி புதூர், காந்தி கிராமம், ராமன்சேரி, குப்பத்துப் பாளையம், குண்ணவளையம், நாராயணபுரம் உள்ளிட்டப் பகுதிகளில் ஆதிக்கச் சமூகத்தினர் அதிகளவில் வசிக்கின்றனர்.

எங்கள் ஊரின் பின்புறத்தில் குசஸ்தலை ஆறு உள்ளது. இதில் வெயில் காலங்களில் தண்ணீர் குறைவாக இருக்கும். மழைக் காலங்களில் வெள்ளம் பெருகும். எங்கள் பகுதியில் யாரேனும் இறந்துவிட்டால் எந்த ஆற்றைக் கடந்துதான் சுடுகாட்டிற்குச் சுமந்து செல்வோம். அப்படி மூன்று தினங்களுக்கு முன்பு இறந்தவர் ஒருவரைத் தூக்கிச் செல்லும் போது வெள்ளம் அதிகமானதால் பிணத்தைத் தூக்கிச் சென்றவர்களையும் வெள்ளம் இழுத்து ஒரு வழியாகக் கயிரைக் கட்டிப் பிணத்தை கரைக்கு இழுத்துச் சென்றோம். இதுபோன்று ஒவ்வொரு முறையும் பிணத்தைச் சுடுகாட்டிற்குக் கொண்டு செல்வதற்குள் நாங்களும் பிணமாகி விடுவதுபோல் உள்ளது நிலைமை என்றார். உள்ளூர்வாசி குணசேகரன் கூறும்போது: எங்களுக்குச் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை இருந்தது. இதை கடந்த 20 ஆண்டுகளாகப் பட்டா நிலம் என்று சொல்லி கிருஷ்ணன் யாதவரும், ஜெகதீசன் யாதவரும் வேலி அமைத்துப் பயிர் செய்து வருகின்றனர். அப்படி சுடுகாட்டிற்கு ஊர் வழியாகப் பிணத்தைக் கொண்டு சென்றால் ஆதிக்க சாதியினர் உங்களுக்கும் எங்களுக்கும் கெடுதி வந்து சேரும் என்று ஏதோ புராணக் கதைகளைச் சொல்கின்றனர். அப்படியே ஊர் வழியாகக் கொண்டு சென்றாலும் 2 கி.மீ. மேல் சுற்றி வரவேண்டும். இத்தனை பிரச்சனைகள் இருப்பதால்தான் உயிரையும் பணயம் வைத்து ஆற்றைக் கடந்து சென்று பிணத்தை அடக்கம் செய்து வருகின்றோம் என்றார்.

மகளிர் குழுவைச் சேர்ந்த கன்னியம்மாள், சுகுணா, எஸ். லட்சுமி, பி. லட்சுமி ஆகியோர் கூறியது: எங்கள் ஊரில் யாராவது இறந்துவிட்டால் இறந்தவர்களுக்காக வருத்தப்படுவதைவிட அவர்களை ஆற்றைக் கடந்து எப்படி தூக்கிச் செல்லப்போகிறோம் என்றுதான் ஒட்டுமொத்த ஊர் மக்களும் வருத்தப்படுவதுண்டு. இந்த அரசாங்கம் எத்தனையோ பெரிய பெரிய கட்டிடம் எல்லாம் கட்டுராங்க, கோடிக் கணக்குல மக்களுக்கு உதவி செய்றதா சொல்லுறாங்க, ஆனா எங்களுக்கு எந்த உதவியும் இதுவரை கிடைக்கில. ஓட்டு கேட்கிறசமயத்தில் சந்து, இடுக்கு எல்லாம் தேடி வந்து காலையும், கையையும் பிடிக்கிறாங்க. இப்ப ஜெய்ச்ச ஆளுக முகத்தைகூட காணல. நாங்க ஏறி இறங்காத அரசாங்க ஆபிசே இல்லை. 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து மனு கொடுத்தும், பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டும் எந்தப் பயனும் இல்லை. எங்க திருவள்ளூர் தொகுதி எம்.எல்.ஏ. ரமணா இப்போது சுற்றுச் சூழல் அமைச்சராக இருக்கிறார்.

அவரிடம் பல முறை மனுகொடுத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. தற்போது ஒரு மாதகாலத்திற்குள் சுடுகாடிற்குப் பாதை ஒதுக்கித் தருவதாக அதிகாரிகள் கூறியிருக்கின்றனர். நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் முதல் கட்டப் போராட்டம் திருவள்ளூர் தாலுக்கா ஆபிசுதான் என்றனர் ஒட்டுமொத்த மகளிர் குழுவினரும். இவ்வூரைச் சார்ந்த மாணவன் பாலாஜி நம்மிடம்: எங்கள் ஊரில் 200 மாணவர்கள் வெளியில் சென்று படிக்கின்றனர். 1 1/2 கி.மீ. தூரம் நடந்து சென்றுதான் புதூர் ரைஸ்மில் பஸ் நிறுத்தத்தில் பஸ் பிடிப்போம். ஆனால், இந்த பஸ் நிறுத்தத்தில் எந்த பஸ்சும் நிறுத்துவது இல்லை. இதனால் வாரத்தில் மூன்று நாட்கள் பள்ளி செல்ல முடியாமல் வீடு திரும்பிவிடுகிறோம். பள்ளியிலும் தொடர்ந்து படிக்க வழியின்றி பள்ளியைவிட்டே நின்றுவிடுகிறோம்.

இந்தச் சுடுகாட்டிற்கு வழி வருவதன் மூலம் மாணவர்களாகிய நாங்களும் ஊர்மக்களும் அந்தப் பாதையைப் பயன்படுத்தி விரைவாகச் சென்றுவர உதவும். இல்லை என்றால் 2 கி.மீ சுற்றி மொத்தம் 5 கி.மீ. நடக்க வேண்டி உள்ளது. இதை அனைத்தையும் கவனத்தில் கொண்டு அரசாங்க அதிகாரிகள் பாதையமைத்து கொடுத்தார்கள் என்றால் எல்லோரும் சந்தோஷப்படுவோம் என்றார் பெரும் ஏக்கத்துடன். இப்பிரச்சனை சம்பந்தமாக சுற்றுச்சூழல் அமைச்சரும் திருவள்ளூர் தொகுதி எம்.எஸ்.ரவுமான ரமணா அவர்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது அவரின் உதவியாளர் மாணிக்கம் கூறியதாவது:

எல்லப்பநாயுடு பேட்டையில் வசிக்கும் மக்கள் சுடுகாட்டிற்குச் செல்ல தனி நபர் பட்டா நிலத்தில் பாதை ஒதுக்கப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். ஓரிரு வாரங்களுக்குள் இப்பிரச்சனை முடிக்கப்படும் என்றார்.

த. பாக்கியராஜ்(மாநில துணை தலைவர், புரட்சி அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்): அரசு இயந்திரங்களும், தனியார் கம்பெனிகளும் இம்மமாவட்டத்தில் பரவலாக பெருகிவரும் சூழலில் தலித் மக்கள் வாழும் பகுதிகளில் அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளன. இம்மக்களுக்கு விரைவில் பாதையுடன் கூடிய சுடுகாடு அமைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மக்களைத் திரட்டிப் போராட உள்ளோம் என்றார். அமைச்சரின் தொகுதியில் அல்லாடும் இந்த தலித் மக்களின் நீண்ட நாள் போராட்டம் நிறைவு பெறுமா ?

**ஆதாரம்: மக்கள் களம், ஏப்ரல் 2012**

# கழிவறைகளாக ஆக்கப்படும்

## அருந்ததியர் குடியிருப்பு

**– மோனிஸ் முகில்**

கரூர் மாவட்டம் அவரக்குறிச்சி தாலுக்காவிற்குட்பட்ட வடுக நாகம்பள்ளி கிராமத்தில் கவுண்டர், நாடார், மீனவர் எனப் பல சாதியைச் சார்ந்தவர்கள் வாழ்ந்தாலும் அருந்ததிய இனத்தை சார்ந்த 25 குடும்பங்கள் இவர்களது பார்வையில் வாழ முடியாமல் தத்தளித்துக்கொண்டு இருக்கின்றனர். இதைக் கவனத்தில் கொண்ட அரசு விதிவிலக்காய் ஊருக்கு ஒதுக்குப் புறமாக உள்ள ஓடை புறம்போக்கிலும், நத்தம் புறம்போக்கிலும் அருந்ததியர்களுக்கு இடம் ஒதுக்கியதில் இவர்களே குடிசைகள் அமைத்து வாழ்ந்து வந்தனர்.

இதைப் பொறுத்துக் கொள்ளாத ஆதிக்கவர்க்கம் இவர்களைப் பலவழிகளால் துன்புறுத்தியும் அவமானப்படுத்தியும் வருகின்றனர். அப்படி பாதிப்புக்குள்ளான அருக்காணி நம்மிடம்: அருந்ததியர்களான நாங்கள் சுமார் 50 ஆண்டுகளாக வடுக நாகம் பள்ளியில் குடியிருந்து வருகின்றோம். எங்கள் மீது சாதி வெறி கொண்ட நாடார்களும் மற்ற மேல் சாதிக்காரர்களும் எங்கள் வீட்டு அருகிலேயே காலைக் கடன்களைக் கழித்து வந்தார்கள்; நாங்களும் பொறுத்துக் கொண்டோம். ஆனால், தற்போது எனது வீடு அருகில் இருக்கும் பழனிச்சாமி நாடார் என்பவர் எனது வீட்டின் அருகில் எனது நிலத்தில் குளியல் அறை, கழிவறை ஆகியவை கட்டியுள்ளார். அதைப் பார்த்த நான் எதற்கு எனது நிலத்தில் கட்டுகிறீர்கள் என்று கேட்டதற்கு இது உன் இடமா, இல்லை எனது இடம் என்று பழனிச்சாமி நாடார் என்னிடம் வம்புச் சண்டைக்கு வருகிறார். மேலும் கேட்டால் உன்னால் என்ன பண்ணமுடியும், உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள் என்று சவால்விடுகிறார். இப்படியேவிட்டால் இனி சண்டை பெரிதாகிவிடும் என்று அரசவக்குறிச்சி காவல் நிலையத்தில் பழனிச்சாமி நாடார் எனது நிலத்தை ஆக்கிரமிப்பு செய்கிறார் என்று புகார் கொடுத்தேன். புகார் ரசீது கொடுத்தார்கள், ஆனால் இன்று வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆகவே எங்கள் ஊரைச் சேர்ந்த தலித் விடுதலை இயக்கத்தின் தலித் பெருமாள் என்பவரிடம் நடந்தவை எல்லாம் சொன்னேன்.

தலித் பெருமாள் கூறும்போது: அருந்ததியர் அருக்காணி என்பவரது வீட்டின் அருகில் பழனிச்சாமி என்பவர் கழிவறை கட்டியதின் சம்பந்தமாக 28.02.2012 அன்று செவ்வாய்க் கிழமை அரவக்குறிச்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளர் பானுமதி அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினேன். சரி என்று கூறிய ஆய்வாளர் பானுமதி அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார். சம்பவ இடத்தைப் பார்த்தவுடனே ஊரில் இருக்கும் பெரியவர்களை வைத்து பேசிக் கொள்ளுங்கள் என்று கூறினார். பின் இனி நீங்கள் எல்லாம் கட்டப் பஞ்சாயத்து மூலம் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி முடித்தார். அதை கேட்ட நான் உடனே மறுப்பு தெரிவித்தேன். சக்கிலி தேவுடியா பயலே என்னடா போலீசையே எதிர்த்து பேசிறியா என்று கேவலமாகத் திட்டினார். மேலும் பொது மக்கள் முன்னிலையில் என் இரண்டு கன்னத்திலும் அறைந்தார். இது சம்பந்தமாகக் கரூர் மாவட்டக் காவல்துறையிடம் புகார் கொடுத்துள்ளேன். இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அருக்காணியின் மகள் ஜெயசித்ரா கூறும்போது: எங்களுக்கென்று இந்த ஊரில் யாருமே இல்லை; எங்களை அடிமைப்படுத்துவதே இந்த ஊர் உயர் சாதிக்காரர்களுக்குப் பழக்கமாகிவிட்டது. இன்றும் எங்க சாதியை அரசாங்கம் கூட ஏற்றுக்கொள்ளாத நிலையில் உள்ளோம் என்று கூறி கண்கலங்கினார். நாட்டையும், நகரத்தையும், ஊரையும் சுத்தம் செய்து அழகு பார்க்கும் இம்மக்களின் குடிசைகளையும் கழிப்பிடமாக்கும் ஆதிக்க சாதியினர் மீது அரசு எந்த சட்டத்தைக் கொண்டு நடவடிக்கை எடுக்குமோ என்பதே இம்மக்களின் கனவாக உள்ளது.

**ஆதாரம்: மக்கள் களம், ஏப்ரல் 2012**

**அமெரிக்காவின் பிரின்ஸ்டன் பல்கழைகத்தின் முதுகலைப் பட்டமாணவர்கள், மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிஅமைப்பின் வழிகாட்டுதலோடு திருவள்ளூர் மாவட்டம், பூண்டி ஒன்றியம், ஒதப்பை ஊராட்சியில் தேசிய ஊரக வேலைத் திட்டப் பயனாளிகளோடு உரையாடுகின்றனர்.**





**மாணவர்கள் பூண்டி ஒன்றியத்திலுள்ள ஊராட்சியில் தேசிய ஊரகவேலைத் திட்டப் பணித்தளத்தை ஊராட்சித் தலைவரோடு பார்வையிடுகிறார்கள்**

வெளியீடு

## மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு (HRF)

எண்.10, எல்.டி.ஜி. ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015. இந்தியா
தொ.பே.044–22353503, தொ.நகல். 22355905, மின் அஞ்சல் : humanrightsadvocacyandresearch@gmail.com
இணையதளம் : www.humanrightsadvocacyandresearchfoundation.org